மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மட்டும்

MIR

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில

7-வது மகாநாடு

[மதுரை: 15-10-64 முதல் 18-10-64 வரை]

மாநில இணைப்புக் குழுவின் அரசியல் ஸ்தாபன நகல் அறிக்கை.

அரசியல் - ஸ்தாபன நகல் அறிக்கை

1. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் திருத்தல்வாதம் தலையெடுத்துக் கட்சியை இரண்டாக்கி விட்டது. இதை எதிர்த்து முறியடித்து, ஒரு உண்மையான மார்க்சிச—லெனினிசக் கட்சியைக் கட்டும் கடுமையான போராட்டம் நாடு முழுவதும் நடந்து வருகிறது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போராட்டத்தில், தமிழகத் தோழர்கள் ஆற்றியுள்ள பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாகப் பல்வேறு முறைகளில் நாம் திருத்தல் வாதத்தை எதிர்த்துப் போராடி முன்னேற்றம் கண்டிருக்கிறோம். ஆரம்ப கட்டத்தில் திருத்தல்வாதத் தலைமையிலிருந்த கட்சி ஸ்தாபன அமைப்புக்குள்ளேயே நின்று, நாம் மைனாரிட்டியாக இருந்த கமிட்டிகளில்கூட, ஒவ்வொரு பிரச்சினையிலும் உறுதியாக நமது நிலையை வலியுறுத்தி, சரியான கொள்கைக்காகவும் கட்சியின் ஒருமைப்பாட்டிற்காகவும் போராடினோம். திருத்தல்வாதத் தலைமையினர், நமது முயற்சிகளை உதாசீனம் செய்து, மாநிலத் தலைமைக் கமிட்டியில் மெஜாரிட்டி இருக்கிறதென்ற அகந்தையில், நமது ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அனைத்தையும் பிடிவாதமாய் நிராகரித்ததோடு, நம்மீது விடாது அவதூறு பொழிந்து, ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கட்சியைப் பிளவுபடுத்துவதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தார்கள். இரண்டாவது கட்டத்தில், கட்சியின் ஒற்றுமைக்காக மீண்டும் நமது ஆலோசனைகளை முன் வைத்து, திருத்தல்வாதத் தலைமையினரின் தொடர்ந்த கட்சிவிரோத நடவடிக்கைகளை, கட்சி அணிகளுக்கு முதன்முறையாக விரிவாக எடுத்துக் கூறினோம். இவ்வாறு அவசரப்படாமல், பொறுமையாகவும், படிப்படியாகவும் நாம் செயல்பட்டதானது, பெருவாரியான

கட்சித் தோழர்கள் உண்மை நிலைமையை உணர்ந்து திருத்தல் வாதத்தை எதிர்த்து அணி திரளப் போதிய அவகாசமளித்து உதவியது. மூன்றாவது கட்டத்தில், ஒற்றுமை முயற்சிகள் அனைத்தையும் திருத்தல் வாதிகள் உதறித்தள்ளிய பிறகு, கட்சிக்கொள்கையைப் பாதுகாக்கவும் உண்மையான கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தைக் கட்டவும் தனி ஸ்தாபன அமைப்பின்றி வேறு வழியில்லை என்பது தெளிவாயிற்று. எனவே, தனி ஸ்தாபன அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, கிளையிலிருந்து மாநிலத் தலைமைக் குழுவரை ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக செயல்பட்டோம். மாவட்ட மாநாடுகளை முறையாக முடித்துக்கொண்டு இப்போது மாநில மாநாட்டிற்குக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் வந்திருக்கிறோம். திருத்தல் வாதத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில், நமது அனுபவங்களைப் பரிசீலித்துக்கொண்டு, பலம் பொருந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்கு, இந்த மாநாட்டு விவாதங்களும் முடிவுகளும் உதவிசெய்ய வேண்டும். இந்தியா முழுவதும் இவ்வாறே பெருவாரியான கட்சி அணிகள் மாநிலம் மாநிலமாக திருத்தல் வாதத்தை எதிர்த்துப்போராடி முன்னேறி வருவதும் கண்கூடு. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அக்டோபர் 31-ம் தேதி கல்கத்தாவில் நடைபெறவிருக்கும் நமது அகில இந்திய மகாநாடு-(கட்சியின் 7-வது காங்கிரஸ்). இந்தியாவில் ஒரு மார்க்சிச-லெனினிசக் கட்சிக்கு உறுதியாக அஸ்திவாரமிட்டு வழிகாட்டுமென்று எதிர்பார்க்கலாம்.

அரசியல் சூழ்நிலை

2. சாதாரண மக்களின் வாழ்க்கைநிலை நாளுக்கு நாள் சீர்கெட்டு, விலைவாசி உயர்வு கடுமையான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள ஒரு சூழ்நிலையில் நாம் கூடுகிறோம். காங்கிரஸ் சர்க்காரின் நடவடிக்கைகள் மக்களுக்கு உறுதியான வாழ்வளிப்பதாக இல்லை. சர்க்காரின் ஜனவிரோதக் கொள்கைகளை எதிர்த்து, கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும், ஹர்த்தால்களும் நடந்த வண்ணமிருக்கின்றன. ஆனால் ஆட்சியாளர்கள் அனுசரிக்கும் முறைகள் அதிருப்

தியை அதிகரித்து வருகின்றனவே தவிர அணுவளவும் தீர்க்கவில்லை. மக்களின் விருப்பத்திற்கு மாருக, அவசர நிலைப் பிரகடனம் காலவரையறையின்றி நீட்டி வைக்கப் பட்டிருக்கிறது. அமைதியான ஆர்ப்பாட்டங்கள் கூட அடக்குமுறைகொண்டு அடக்கப்படுகின்றன. துப்பாக்கிப் பிரயோகச் செய்திகள் அதிகரிக்கின்றன. வேலை நிறுத் தங்களில் பங்கெடுப்பவர்கள் அல்லது அவற்றை ஆதரிப் பவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி சிறைக்கனுப்பப்படுகிருர் கள். இரண்டு வருடங்களுக்கு முன் பாதுகாப்புக் கைதி களாக வைக்கப்பட்ட நமது மகாராஷ்டிர மா நிலத் தோழர் களான பி. டி. ரணதிவே, எஸ்.வி. பருலேக்கர், கோதாவரி பருலேக்கர் முதலியவர்கள் இன்னும் அநியாயமாய் சிறை யில் அடைக்கப் பட்டிருக்கிருர்கள். பார்லிமெண்டிலும், சட்டசபைகளிலும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள், காங்கிரஸ் ஆட்சிக்கு மக்களின் எதிர்ப்பை எடுத்துக்காட்டி வருகின்றன. கேரள மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்துபோயிற்று.

3. எல்லா அரசியல் கட்சிகளையும் தீவிரப்பட்டுள்ள இன்றையநிலை பாதித்திருக்கிறது. காங்கிரஸ் தலைமைக் குள்ளேயே ஒவ்வொரு மாநிலத்திலும் குத்துவெட்டு நடக் கிறது. காங்கிரஸ் மந்திரிகள்மீது லஞ்சக் குற்றச்சாட்டு களும் விசாரணைகளும் மலிந்து வருகின்றன. குருப்பு களாகவும் கோஷ்டிகளாகவும் பதவிச்சண்டைகள் காங்கிர சில் இடையருது நடக்கின்றன. காங்கிரஸ் கொள்கை களுக்கு பல கோணங்களிலிருந்து அவர்களது கட்சிக்குள் ளேயே எதிர்ப்பு நிறையக் காணப்படுகிறது.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி இரண்டாகிக் கரைந்து விட்டது. ஒரு பகுதி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தது, மற்ருெரு பகுதி புதிதாக ஏற்பட்ட சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியில் அங்கம் பெற்றது. சுதந்திரா கட்சி, வலதுசாரி கோஷங்களுடன் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துத் தனது கொள்கையைத் திணிக்க மேலும் வேலை செய்யும் அதே நேரத்தில், பீகார் மாநிலத்தில் சுதந்திரா கட்சியினர் கூண்டோடு ராம்கார் ராஜா தலைமையில் காங்கிரஸ் கட்சி யில் சேர்ந்தனர். பார்லிமெண்டில் காங்கிரஸ் கட்சியின்

மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சுதந்திராக் கட்சி ஆதரிக்க மறுத்தது தற்செயலானதல்ல. நமது மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், மக்களை பாதிக்கும் நெருக்கடி மிக்க உடனடி வாழ்க்கைப் பிரச்சினைகள் எதிலும் வெகுஜன நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தவிர்த்துக்கொண்டு அதே சமயத்தில் இந்தி எதிர்ப்பு மொழிப் போராட்டத்தின் மூலம் தனது அணிகளிடமும் பொது மக்களிடமும் தனது நிலையை உறுதிப்படுத்தி வைத்துக்கொள்ளவும் அடுத்த பொதுத் தேர்தலில் மேலும் அதிக ஸ்தானங்களைப் பெறவும் செயல்பட்டு வருகிறது. இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்த மட்டில், அதிலிருந்த திருத்தல்வாதத் தலைமை, காங்கிரஸ் கட்சிக்குக் காவடி தூக்கி, கட்சியை ஏற்கெனவே பிளவுபடுத்தி விட்டது நாடறிந்த விஷயம். மகாராஷ்டிர மாநிலத்தில் அகமத் நகரைச் சேர்ந்த 200 கம்யூனிஸ்டுகள் காங்கிரசில் சேர்ந்து விட்டார்களென்ற செய்தியையும் பத்திரிகையில் படித்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து வந்து தமிழ் தேசீயக் கட்சி அமைத்துக்கொண்டு இங்கிருந்த சோஷலிஸ்டுகட்சியையும் தன்னுடன் சேர்த்துக்கொண்ட ஸ்தாபனமும், தன்னுடைய அமைப்பைக் கலைத்துவிட்டு காங்கிரஸ் கட்சியைப் போய் அடைந்ததையும் சமீப காலத்தில் பார்த்தோம்.

4. இந்த நிலைமையில், மக்களின் மீட்சிக்கு சரியான மாற்று வழிகாட்டும் பொறுப்பை, ஒரு உண்மையான தொழிலாளிவர்க்கக் கட்சியிடமிருந்துதான் எதிர்பார்க்க முடியும். மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும், சரியாகப் புரிந்துகொண்டு, அவர்களின் எல்லாப் பகுதியினரையும், தொழிலாளிவர்க்கம் காட்டும் பாதையில் திரட்டி அழைத்துச் செல்லும் சிறந்த வாய்ப்பும் சரித்திரபூர்வமான கடமையும் நமக்கு ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் நாம் கூடுகிறோம். இந்தக் கடமையை உறுதியாகவும் மார்க்சிசக் கொள்கைத் தெளிவுடனும் நிறைவேற்றுவதில், தலைமைப் பாத்திரம் தாங்கவேண்டிய கம்யூனிஸ்டு கட்சியை; ஒரு உண்மையான மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் கட்சியாகக்

கட்டுவதற்குப் பெருந்தடையாக இருந்த திருத்தல் வாதத்தை எதிர்த்து, நாடு முழுவதும் கட்சித்தோழர்கள் கடுமையாகப் போராடி முன்னேறிவரும் காலகட்டத்தில் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

பிரதான திரிபு திருத்தல் வாதம்

5. மார்க்சிச-லெனினிச சித்தாந்தம் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைகளுக்கு வழிகாட்டும் விஞ்ஞானமாகும். இதை நடைமுறையில் நமது நாட்டிற்கொத்த முறையில் பிரயோகித்து அனுபவத்தின் மூலமும் பரிசீலனையின் மூலமும் நாம் மென்மேலும் கொள்கைத் தெளிவில் பயிற்சி பெறுகிறோம். முதலாளித்துவ சமுதாய அமைப்பில் செயல்பட்டுப் போராடி முன்னேறும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மார்க்சிசக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரும் போது, திரிபுகள் ஏற்படுவது இயற்கை. இவற்றை அவ்வப்போது உணர்ந்து, களைந்து, மார்க்சிசத்தின் தூய்மையைப் பாதுகாத்துக் கொண்டுதான் நாம் சரியான திசை வழியில் செல்லமுடியும்.

திருத்தல் வாதமும், வரட்டுத்தத்துவ வாதமும், கட்சியில் எழக்கூடிய இருமுக்கியமான திரிபுக்ள், குறிப்பிட்ட காலகட்டத்தில், எந்தத்திரிபு கட்சியை பாதிக்கிறதென்று அறிந்து, திரிபை எதிர்த்துப் போராடுவதன் மூலம்தான் கட்சியை உறுதிப்படுத்துவதும் பக்குவப்படுத்துவதும் சாத்தியம். இப்பொழுது இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிரதான திரிபு, திருத்தல் வாதமாகும். இதை எதிர்த்து நடைபெறும் போராட்டம் தொடர்ந்து நடைபெறும், கடினமாகவும் இருக்கும்.

6. இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பகிரங்கமாக வெளிப்பட்டுள்ள திருத்தல் வாதம் திடீரென்று தோன்றிவிடவில்லை. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் சூழ்நிலையிலும் இது தலைதூக்குகிறது. இதற்கு இடமளித்த பௌதிக அஸ்திவாரத்தை நாம் பார்க்க முயற்சிக்கவேண்டும். இதை உரிய காலத்தில் எதிர்த்து அகற்றாமலிருந்ததற்கு நமது அரசியல் ஸ்தாபன பலவீனம் எந்த அளவுக்குப் பொறுப்பாயிருந்திருக்கிறது என்பதையும் பார்ப்பது அவசியம். இவ்வாறு நாம் பரிசீலித்துக் கொள்வது திருத்

தல் வாதத்தைத் தொடர்ந்து எதிர்த்துப் போராடி வெற்றி காண்பதற்கும், நமது கட்சியை எதிர்காலத்தில் உறுதி யாகப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இன்றியமையாத படிப்பினையாகும்.

திருத்தல்வாதம் வேரெடுத்த சூழ்நிலை

7. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நமது நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவுற்று, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நடப்பில் இருக்கிறது. இவற்றின் விளைவாக இங்கு முதலாளித் துவ வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இந்த வளர்ச்சி, பாமர மக் களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவில்லை என்பதும் அதற்கு மாருக வரிச் சுமையையும், கடன் சுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏற்றி, நிலப் பிரபுத் துவ அம்சங்கள் நீடிப்பதற்கும் ஏகபோக முதலாளித்துவம் வலுப்பெறுவற்கும் அன்னிய மூலதனம் உள்ளே மேலும் நுழைவதற்கும் உதவி புரிந்துள்ளது என்பதும் நாமறிந்த விஷயம். ஆனுல் இந்த முதலாளித்துவ வளர்ச்சியோடு தோன்றியுள்ள சில மாறுதல்களையும் அவற்றையொட்டி எழுந்துள்ள சில எண்ணப் போக்குகளையும் நாம் சரியாகக் கணக்கிலெடுத்துக் கொண்டால்தான் திருத்தல்வாதம் இந்தக் கால கட்டத்தில் பிரதான அபாயமாக நமது கட்சிக்குள் படையெடுத்துள்ளதை சரிவரப் புரிந்து கொள்ள முடியும்.

8. சுதந்திர இந்தியாவில் அரசியல் அதிகாரம் பெற்ற முதலாளி வர்க்கம், ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் துரிதமாக வளர முற்பட்டது. புதிய தொழிற்சாலை கள் ஏற்பட்டன. அணைக் கட்டுகள் பல தோன்றின. மின்சார வசதி அதிகரித்தது. ரோடுகள் எங்கும் பரவின. தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் என்ற பெயர்களுடன் பணப் புழக்கம் கிராமங் களில் மேலும் நுழைந்தது. முதலாளித்துவ வளர்ச்சி

பல கிராமங்களுக்கும் சென்றது. தொழிலபிவிருத்திக் கெனத் துவக்கப்பட்ட புதிய நிதி நிறுவனங்களின் மூலம் வசதியோ செல்வாக்கோ இருந்தவர்கள் கையில், பண நடமாட்டத்திற்கு சௌகரியம் கிடைத்தது. லைசென்சுகள் பெர்மிட்டுகளுடன் லஞ்சலாவண்யங்களும் பலவிதத் தரகர்களும் தோன்றினர். திட்ட நடவடிக்கைகளில் பிரதானமாக மேல் தட்டு வர்க்கங்களே பலன் பெற்ருலும் ஆங்காங்கு சில மத்தியதர வர்க்கப் பகுதிகளுக்கும் சிறு ஆதாயம் கிடைத்தது. தொழிலாளிகளில் ஒரு பகுதியினரும், குறிப்பாக அவர்களது சங்கங்கள் பலமாயிருந்த தொழில்களில், இதர தொழிலாளிகளோடு ஒப்பிடும்போது, சில சலுகைகளையும், ஓரளவுக்கு ஊதிய உயர்வையும் பெற முடிந்தது. பல தொழிலதிபர்கள் ஏற்பட்டார்கள், கிராமப்புறங்களில் பணக்கார விவசாயிகளின் பகுதி உரம் பெற்றது.

9. ஐந்தாண்டுத் திட்டங்களினுலேற்பட்ட முரண்பாடு மிக்க இந்த முதலாளித்துவ வளர்ச்சியை, காங்கிரஸ் கட்சியும் சர்க்காரும் பெரிய சாதனையாக ஓயாமல் வர்ணித்தனர். அன்ருட ரேடியோச் செய்திகள் மூலமும், அறிக்கைகளின் மூலமும், எண்ணற்ற வெளியீடுகளின் மூலமும், பார்லிமெண்டையும் சட்டசபைகளையும் இதற்கு நன்கு பயன்படுத்துவதின் மூலமும் நாட்டின் சுபீட்சத்திற்கு இவ்வாறு வழி செய்துள்ளதாக மிக வன்மையாகப் பிரச்சாரம் செய்தனர். திட்ட நடவடிக்கைகளினுல் பலனடைந்த முதலாளி வர்க்கமும் அதன் பத்திரிகைகளும் இதற்கு ஒத்து ஊதும் முறையில், தங்களுக்குக் கிடைத்த சுபீட்சத்தை நாடு பூராவிற்கும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியாக வர்ணித்து விளம்பரப்படுத்தத் தவறவில்லை.

10. சுதந்திரமடைந்த பிறகு இந்தியாவில் ஏற்பட்ட இந்தப் புதிய முதலாளித்துவ வளர்ச்சியும் விஸ்தரிப்பும் தான் மக்களின் பல பகுதிகளிடையே இதைப்பற்றிப் பல பிரமைகள் ஏற்படுவதற்கு இடமளித்தது. இதே புற நிலைதான், கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் இந்தப் பிரமைகள் படையெடுத்துத் திருத்தல் வாதம் தோன்றி வளர்வதற்கு அனுசரணையாயிருந்தது. இத்தகையதொரு சுற்றுச்

சார்பின் பௌதீக அஸ்திவாரமின்றி திருத்தல் வாதம் இவ்வளவு அபாயகரமான அளவுக்கு உருவெடுத்திருக்க முடியாது.

11. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வந்தபோது, இதனுல் எத்தகைய மாறுதலும் ஏற்படப் போவதில்லையென்ற நிலையை முதலில் கட்சி எடுத்தது. பிறகு, திட்டங்களைப் பற்றி ஆக்க பூர்வமான கண்ணேட்டம் வேண்டுமென்று நமது நிலை மாற்றிக் கொள்ளப்பட்டது. திட்ட நடவடிக்கைகளில் பங்கு கொண்டு, காரிய சாத்தியமான ஆலோசனைகளை வழங்கி, திட்டத்தின் பலன் சாதாரண மக்களுக்குக் கிடைக்கும் வகையில் நாம் செயல்படவேண்டுமென்று சொல்லப்பட்டது. படிப்படியாக, வெகுஜன இயக்கத் தொடர்போ தலையீடோ இல்லாத ஒரு சில கட்சித் தோழர்கள் மட்டும் பங்கு கொள்ளும் கட்சி வேலையாக இது நடைமுறையில் மாறியது. திட்டங்களைப்பற்றி கட்சியின் தீர்மானங்கள் தெளிவாக நமது கண்ணேட்டத்தைப் பற்றி எச்சரிக்கை அளித்திருந்தும், முதலாளித்துவக் கட்டுக் கோப்புக்குள்ளேயே மக்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென்ற அளவிற்கு திட்ட நடவடிக்கைகளைப் பற்றி சீர்திருத்தவாதப் போக்கு கட்சிக்குள்ளேயே தோன்றலாயிற்று.

12. இது சம்பந்தமாக இன்னெறு விஷயத்தையும் இங்கு குறிப்பிட்டு விடலாம். முதலாளித்துவ வளர்ச்சியை உறுதி படுத்திக்கொண்டு வந்த இந்திய முதலாளி வர்க்கம், மக்களின் அதிருப்தியையும் எதிர்ப்பையும் கணக்கில் எடுக்கவேண்டியிருந்தது. இதை முன்னிட்டுச் சில சாகசங்களையும் கையாண்டது, ''ஆவடி சோஷலிசம்'' இத்தகைய சாகசங்களில் ஒன்று. நாட்டில் சோஷலிசம்தான் கட்டப்பட்டு வருகிறது. முதலாளித்துவமல்ல என்று மக்கள் நம்புவதற்காகக் காங்கிரஸ் கட்சியால் கையாளப்பட்ட கோஷம் இது. இதேமாதிரி நாகபுரி நிலச் சீர்திருத்தத் தீர்மானத்திலிருந்து புவனேஸ்வரம் ''ஜனநாயக சோஷலிசம்'' தீர்மானம் வரை பல சாகச நடவடிக்கைகளை உதாரணங் காட்டலாம். இவற்றின் மூலமும் நாட்டிலேற்பட்டு வரும் வளர்ச்சியைக் குறித்து

பலத்த பிரச்சாரத்துடன் பல பிரமைகளை ஏற்படுத்த காங்கிரஸ் கட்சிக்கும் சர்க்காருக்கும் முடிந்தது. கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே பூர்ஷ்வா வர்க்கத்தின் இத்தகைய சாகச நடவடிக்கைகளைப் பற்றி வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் சரியான கணிப்பின்றி, பூர்ஷ்வா வர்க்கத்தின் முற்போக்குத் துதிபாடும் சீர்திருத்தவாதப் போக்கு தலையெடுக்க இடமேற்பட்டது.

13. 1948-முதல் 1951-வரை கட்சியை ஆட்கொண்ட பிரதான திரிபாக இருந்தது வரட்டுத் தத்துவ இடதுசாரிப் போக்கு. அதை எதிர்த்து அதிலிருந்து விடுபட்டு, சரியானகொள்கையினடிப்படையில் செயல்பட கட்சி முடிவு செய்தது. மீண்டும் இடதுசாரிப் போக்கு கட்சிக்குள் நுழைந்துவிடக் கூடாதென்ற கவலையுடன் அந்தத் திரிபைக் குறித்த எச்சரிக்கைதான் அன்று கட்சிக்குள் மேலோங்கி இருந்தது. ஆனால், இடதுசாரிப் போக்குக்கு எதிர்ப்பு என்ற பெயரால், அதற்கு பதிலாக இன்னொரு கோடியிலுள்ள மற்றொரு திரிபான வலதுசாரி சீர்திருத்தவாதத்திற்கு கட்சி வேகமாய் இழுத்துச் செல்லப்படக் கூடுமென்ற அபாயம் எச்சரிக்கையுடன் பார்க்கப்படவில்லை.

பூர்ஷ்வா பார்லிமெண்டரி முறை தோற்றுவித்த போக்குகள்

14. வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை யளித்து மூன்று பொதுத் தேர்தல்கள் நமது நாட்டில் நடந்திருக்கின்றன. 1948–லிருந்து 1951–வரை கொடிய அடக்கு முறைக்கு ஆளான நமது கட்சி, 1952-ம் வருடம் முதல் பொதுத் தேர்தலில் பங்கெடுத்துக் கணிசமான வாக்குகளையும், ஸ்தானங்களையும் பெற்றது. பார்லிமெண்டிலும், சில சட்டசபைகளிலும் பிரதான எதிர்க்கட்சியாகியது. இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு கேரளத்தில் மந்திரி சபை அமைக்கும் வாய்ப்பும் கட்சிக்குக் கிடைத்தது. சட்டசபை வேலைகள் கட்சிக்குப் புதிய அனுபவங்களைக் கொண்டு வந்தன. பூர்ஷ்வா வர்க்கப் பிரதிநிதிகளுடன்

நெருங்கியத் தொடர்புடன், பூர்ஷுவா வர்க்க அமைப்புக்குள், கட்சியின் பிரதிநிதிகளாக நம் தோழர்கள் செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதைப் போலவே நகர சபைகள், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள் இவற்றிலும் நமது பங்கு அதிகரித்தது. இவற்றிலெல்லாம் வெகுஜன இயக்க வளர்ச்சியும் சம்பந்தப் படுத்தப்படாதபோது, ஒரு சில தோழர்களின் கட்சி வேலைகளாகவே இவை விடப்பட்டன. நிதி நிர்வாகம் போன்ற சில முக்கியமான புதிய பொறுப்புக்களையும், செல்வாக்கையும் இத்தகைய ஸ்தாபனங்கள் நம் தோழர்களுக்கு அளித்தன. இவற்றில் பணியாற்றிய தோழர்களுக்கு மற்ற தோழர்களோடு ஒப்பிடும்போது சில சௌகரியங்களும் ஏற்பட்டன. சட்டசபைகளிலும் சரி, ஸ்தல ஸ்தாபனங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் சரி, ஜனநாயக இயக்க வளர்ச்சிக்கு எவ்வாறு செயல்பட வேண்டுமென்று கட்சித் தீர்மானங்கள் வரையறுத்திருந்தும், அவற்றிற்கு மாருக, வெகுஜன இயக்கங்களில் கவனம் குறைந்து தேர்தலுக்கு நின்று இத்தகைய ஸ்தாபனங்களில் அங்கம் பெறும் கண்ணோட்டம் அதிகமாயிற்று.

முதலாளித்துவ வளர்ச்சியினுலும் பிரச்சாரத் தாக்குதலினுலும் ஏற்பட்ட புறநிலையோடு, கட்சியின் இத்தகைய அகநிலையும், சீர்திருத்தவாதப் போக்கு கட்சியில் வளருவதற்கு துணை புரிந்திருக்கிறது.

சீர்திருத்தவாதம் தலைதூக்கியது

15. மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் எடுத்துக் காட்டும் பின்னணியிலும் சுற்றுச் சார்பிலும் தான், இடது சாரிப் போக்கை எதிர்த்துச் சரியான கொள்கைக்கு வர முயன்று கொண்டிருந்த நமது கட்சிக்குள், சீர்திருத்த வாதப் போக்கு பிடிவாதமாக வளரலாயிற்று, இந்திய முதலாளி வர்க்கம் நிறைவேற்றியுள்ள சாதனைகளைப் பார்க்க வேண்டுமென்றும், இவை நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் காட்டுகின்றன வென்றும், இந்த முதலாளித்துவ வளர்ச்சி

தான் புதிதாக விடுதலை அடைந்துள்ள நமது நாட்டில் சாத்தியமென்றும், இது முற்போக்கான அம்சங்களைப் பிரதானமாகக் கொண்டதென்றும், கட்சிக்குள் ஒரு சாரார் கட்சியின் பல்வேறு மட்டங்களில் வாதிக்கலாயினர். தேசிய பூர்ஷுவா வர்க்கத்திற்கு தொழிலாளி வர்க்கம் ஒத்துழைப்பு அளித்து, காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் தேசீய முன்னணி அமைப்பதை பிரதான அரசியல் கொள்கையாகக் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இவர்கள் வற்புறுத்தினர்கள். 10 வருடங்களுக்கு முன்பு திண்டுக்கல்லில் நடந்த நமது மாநில மாநாட்டிலும், அதையடுத்து நடந்த பாலக்காடு கட்சிக் காங்கிரஸிலும் தீர்மான ரூபமாய் இந்தக் கருத்துக்கள் அங்கீகாரம் பெறப் போராடின. இவையெல்லாம் அன்று கட்சியால் நிராகரிக்கப்பட்ட போதிலும், இவை அன்று (ரிவிஷனிஸ்டு) திருத்தல் வாதக் கருத்துக்களின் ஆரம்பமாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. சீர்திருத்தவாதமாகக் காட்சியளித்த இந்தப் போக்குகள் நாளாவட்டத்தில் புறநிலை அகநிலை அம்சங்களின் துணையோடு கட்சிக்குள் அரசியலிலும் ஸ்தாபனத்திலும் திட்டவட்டமாகக் கட்சியை அழிக்கும் அம்சங்களைத்தும் கொண்ட திருத்தல் வாதமாக உருவெடுக்க முடிந்திருக்கிறது. ஆனல், அன்றைக்கு இந்திய நாட்டின் வளர்ச்சிப் போக்கையும், மக்களின் நிலையையும், விருப்பங்களையும் கணிப்பதில், கட்சியில் மெஜாரிட்டியினர் ஏற்ற கொள்கைக்கு மாறுபட்ட ஒரு அபிப்பிராய பேதமாக மட்டும் இதை நாம் பார்த்தோம். இதனல் இத்தகைய கருத்துக்களை வேரோடு களைந்தெறிய வேண்டிய அவசியம் நமக்குப் புலப்படவில்லை. இதனல் இத்தகைய சீர்திருத்தவாதப் போக்கு, பல பிரச்சினைகளில் பல கமிட்டிகளில் எழுந்த போதெல்லாம், அவற்றைச் சில சமயங்களில் உறுதியாக எதிர்த்து நிராகரித்தும், சில சமயங்களில் அவற்றைப் பற்றி அதிக கவலையில்லாமலும், மற்றும் சில சமயங்களில் அத்தகைய கருத்துக்களுக்கும் சிறிதளவுக்காவது சந்தர்ப்பவாதப் போக்கில் விட்டுக் கொடுத்தும் நாம் செயல்பட்டு வந்திருக்கிறோம்.

16. நமது கட்சி தொழிலாளி வர்க்கக் கட்சியெனினும் மத்தியதர வர்க்கப் பகுதியினர் கணிசமாக உறுப்பி

-னர்களாயிருக்கும் கட்சியாகத் தானிருக்கிறது. உழைப்பாளி மக்களிலிருந்து உறுப்பினர்களாகக் கட்சிக்குள் வந்திருக்கும் ஆயிரக்கணக்கான கட்சி அங்கத்தினர்களுக்கு மார்க்சிய போதம் மிகச் சம்பிரதாயமான அளவுக்குத்தான் ஏதோ நடந்திருக்கிறது. அல்லது அறவே இல்லை என்று கூறவேண்டும். இதனால் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் அபாயகரமான போக்குகள் தோன்றும்போதுகூட தலைமை மட்டங்கள் எச்சரிக்கைக் குறைவாயிருப்பினும், கட்சியின் அணிகளாவது விமர்சனங்களை எழுப்பித் தலையிட்டு கட்சியின் ஜனநாயக முறைப்படி கொள்கைத் தெளிவுக்கு உத்திரவாதமளிக்கும் நிலைமை நமது கட்சியில் இன்னும் வளர்க்கப் படவில்லை. தவருன போக்குகள் கம்யூனிஸ்ட் கட்சியில் வேரெடுப்பதற்கு இந்த நிலைமை சாதகமாயிருந்திருக்கிறதென்ற நிலைமையையும் நாம் பார்க்க வேண்டும். இதிலிருந்து உண்மையாக நாம் படிப்பினை கற்றுக்கொண்டு செயல்படுவதானால், கட்சி முழுவதும் அரசியல் பயிற்சிக்கு திட்டமிட்டு, ஏற்பாடு செய்து, மார்க்சிய போதனையிலும் கட்சியின் கொள்கையிலும் நல்ல தெளிவு ஏற்படுவதற்கு இதை ஒரு முக்கியமான கடமையாக நாம் நிறைவேற்ற வேண்டும். கட்சியில் திரிபுகள் எளிதில் நுழையாமலிருப்பதற்கு மட்டுமல்ல. இனிமேல் எதிர்காலத்தில் நமது கட்சி அரசியல் ஸ்தாபன ஒருமைப்பாட்டுடன் வெகுஜனப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி பலமுள்ள அரசியல் கட்சியாக மலர்வதற்கு இது இன்றியமையாததாகும்.

17. கட்சியில் தலைதூக்கிய சீர்திருத்த வாதம் காலப் போக்கில் திருத்தல் வாதத்தின் கோர உருவத்தை அடைவதற்குள் இந்தப் போக்கு கட்சிக் கொள்கையிலும் நடைமுறையிலும் பிரதிபலித்த உதாரணங்களை மட்டும் இங்கு சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

அரசியல் பிரச்னைகள்

அமிர்தசரஸ் கட்சிக் காங்கிரஸில் முடிவு செய்யப்பட்ட நமது கட்சி ஸ்தாபன சட்டதிட்டங்களின் முகவுரையில்

நமது நாட்டில் சமாதான பூர்வமாக சோசலிசத்திற்குச் செல்ல வேண்டுமானல், கட்சி வெகுஜன போராட்டங்களையும் தொடர்பையும் எவ்வாறு இடையருது வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், எவ்வாறு இத்தகைய உறுதியான வெகுஜன இயக்க வளர்ச்சியின் ஆதாரத்துடன் பூர்ஷுவா பார்லிமெண்டு, சட்டசபைகளை மக்களுக்குகந்த முறையில் செயல்படும்படி நிர்ப்பந்திக்க முடியுமென்றும் ஒரு வரையறை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சீர்திருத்தவாதிகள் இதற்குக் கொடுத்த வியாக்கியானம், சட்டசபைத் தேர்தல்களுக்கு நாம் நிற்கவேண்டு மென்பதோடு நின்றது. வெகுஜன இயக்கங்களையும் தொடர்ந்து கட்ட வேண்டிய அவசியம் மறைக்கப்பட்டது. இந்த அபிப்பிராயம் கட்சிக்குள்ளும் பரவ ஆரம்பித்து, வெகுஜன இயக்கங்களில் கவனம் நீங்கி, எப்படியாவது தேர்தல்களில் வெற்றிபெறும் பூர்ஷுவா சட்டசபைகளிலேயே பிரமைகள் ஏற்படுத்தும் கண்ணேட்டமாகவும் உருவெடுத்தது.

கேரளத்தில் நமது மந்திரிசபை ஏற்பட்டபோது இவ்வாறு பூர்ஷுவா தேர்தல்களின் மூலமே, ஒவ்வொரு ராஜ்யமாகப் படிப்படியாக நமது கட்சி அரசியல் அதிகாரத்திற்கு வந்துவிட முடியுமென்ற தவருன பார்வை பலமாக கட்சிக்குள் ஏற்பட்டது. அதைப் பார்க்கவில்லை மீண்டும் காரைக்குடி மாநாட்டிலேலே இதைப்பற்றி தோழர் அஜய் குறிப்பிட்டாலும், பெரிய அபாயமான இதை சீர்திருத்தவாதமென்ருவது திருத்தல் வாதமென்ருவது கண்டித்து அகற்றிக்கொள்ளவேண்டுமென்று, தோழர் அஜய் கோஷ் விஜயவாடா கட்சிக் காங்கிரஸ் அறிக்கையில் சுட்டிக் காட்டினர்.

இந்திய சர்க்கார் நேருஜீ தலைமையில் முற்போக்கான திட்டத்துடன் சோஷலிச வளர்ச்சியை நோக்கிச் செல்லுகிறதென்ற கருத்துடன் 'நியூ டைம்ஸ்' என்ற சோவியத் பத்திரிகையில் ரூபின்ஸ்டீன் என்பவர் எழுதிய கட்டுரையையும், இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சியின் 10–வது காங்கிரஸில் தோழர் டோக்ளியாட்டி கொடுத்தஅறிக்கையையும் ஆதாரமாகக் கொண்டு, கட்சிக் கொள்கையை முதலாளித்

துவ ஒத்துழைப்புப் பாதையில் பூரணமாக மாற்ற நமது கட்சியிலும் வாதம் முன்வந்தது. ஆனால் இவை முற்றி லும் தவறான அபிப்பிராயங்களென்று நமது மத்தியக் கமிட்டியால் அன்றே நிராகரிக்கப்பட்டன. எனினும் இந்தப் போக்கு கட்சிக்குள்ளிருந்து அகற்றப்பட வில்லை.

ஹங்கேரியில் கம்யூனிஸ்டு சர்க்காரைக் கவிழ்க்க ஏகாதிபத்திய சதி நடந்து எதிர்ப் புரட்சி தலைதூக்கிய போது கம்யூனிஸ்டு சர்க்காரைக் காப்பாற்ற சோவியத் யூனியன் உதவி அளித்ததை, பூர்ஷுவா வர்க்கத்தின் குரலை எதிரொலித்து அதை ஏகாதிபத்திய தலையீடு என்று வர்ணித்த கட்சித் தலைவர்கள் இன்று திருத்தல் வாதி களின் முதல் வரிசையில் இருக்கிறார்கள்.

இந்திய-சீன எல்லைப் பிரச்சினை தோன்றிய காலத்தி லிருந்து, அவ்வப்போது கட்சி எடுத்த சரியான கணிப்பு களுக்கும் முடிவுகளுக்கும் மாறாக, இந்திய பூர்ஷுவா வர்க்கமும் அரசாங்கமும் எடுத்த நிலைதான் சரியானது என்று பிடிவாதமாகவும், பகிரங்கமாகவும், சில திருத்தல் வாதிகள் துணிந்து வேலை செய்தனர்.

இதேமாதிரி-இந்திய மாநிலங்களுக்கிடையே எல்லைத் தகராறுகள் தோன்றியபோது, கட்சியின் தொழிலாளி வர்க்க கண்ணோட்டத்தை மறந்து, பிரதேச பூர்ஷுவாக் கள் கூறியதை அப்படியே பின்பற்றியதிலும் இந்தத் தவ றான போக்கு பிரதிபலித்துக் காட்டியது. கர்னாடக மாநி லத்திற்கும், மகாராஷ்டிர மாநிலத்திற்கும் இத்தகைய தக ராறு மூண்டபோது, பூர்ஷுவா வர்க்கம் மகாராஷ்டிர மாநிலத்தில் கர்நாடக மாநிலத்திற் கெதிராகத் திட்டமிட்ட எல்லைப் போராட்டத்தில் கட்சி பங்கெடுப்பது தவறென்று தேசீய கவுன்சில் போட்ட தீர்மானத்தையும் மீறி டாங்கே அப்போராட்டத்தில் மகாராஷ்டிர மாநிலக் கட்சியைப் பங்கெடுக்க வைத்தது இதற்கொரு உதாரணமாகும்.

ஐந்தாண்டு திட்ட நடவடிக்கைகளிலும், சர்க்கார் துறைத் தொழில்களிலும், நடுநிலைக் கொள்கையை அனு சரிப்பதிலும், சர்க்கார் கொள்கையிலுள்ள குறைபாடுகள் திட்டவட்டமாகக் கட்சித் தீர்மானங்களில் உள்ளன. ஆயி

னும் இவற்றை மூடிமறைத்து, இந்தப் பிரச்சினைகளி லெல்லாம் கம்யூனிஸ்டு கட்சிக்கும் காங்கிரசுக்கும் பொது வான ஒரே கொள்கைதான் இருக்கிறதென்றும், எனவே காங்கிரஸ்—கம்யூனிஸ்டு ஐக்கிய முன்னணிக்கு அடிப்படை இதனால் உள்ளது என்றும் விடாது திருத்தல் வாதிகள் செய்து வந்துள்ள பிரச்சாரத்திலும் பூர்ஷுவா வர்க்கத் திற்கு வால் பிடிக்கும் போக்கும், கட்சியின் தனிப் பாத் திரத்தை அழிக்கும் போக்கும், பகிரங்கமாய் வெளிவந்த தைக் காணலாம். சர்க்காரின் ஐந்தாண்டு திட்டத்தை நமது கட்சியிலும் "திட்டமிட்ட பொருளாதாரம்" என்று வர்ணித்து வந்ததைக் கூட நாம் ஆட்சேபித்துத் திருத் தாதது, ஒரு அடிப்படை அரசியல் கோட்பாடிலும் கூட நமது அசிரத்தைப் போக்கை எடுத்துக் காட்டுகிறது.

இந்திய பூர்ஷுவா வர்க்கமும் அதன் அரசாங்கமும் ஏகாதிபத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளும் நட வடிக்கைகளையோ, அன்னிய மூலதனத்தை வரவழைக் கும் நடவடிக்கைகளையோ மேற்கொண்ட போதெல்லாம் திருத்தல் வாதிகள் இவையெல்லாம் வலதுசாரிப் பிற் போக்கு சக்திகளின் நிர்ப்பந்தத்தின் விளைவென்று, பூர் ஷுவா அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசி, அதே சமயத்தில் ஏதாவது சிறிது அபிவிருத்தி காணப்பட்டா லும், அதில் மக்களுக்கிருந்த பங்கை மறைத்து, பூர்ஷுவா வர்க்கத்தின் முற்போக்குக்கு அறிகுறியாக அதைப் பறைசாற்றித் துதிபாடும் பூர்ஷுவா வர்க்கக் கருவி களாகச் செயல்பட்டிருக்கிறார்கள்.

கட்சி ஸ்தாபனத்தில்

18. ஸ்தாபனத் துறையில், திருத்தல் வாதம் கட்சி யை சீர்குலைக்க சில வருடங்களாகவே செயல்பட்டு வரு கிறது. ஒரு கம்யூனிஸ்டு கட்சிக்கு இருக்க வேண்டிய குணாம்சங்கள் ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டு பூர்ஷுவா அரசியல் கட்சிகளின் தன்மைகள் நமது கட்சியில் நுழைக்கப் பட்டுள்ளன. "லிங்க்" பத்திரிகையிலும் இதர முதலாளித்துவப் பத்திரிகைகளிலும் உள் கட்சி விஷயங்

களையும் குறிப்பாக கட்சியின் தலைமை ஸ்தாபன விவாதங்களையும் பகிரங்கமாக வெளியிட்டுக் கட்சியை நிர்ப்பந்திக்க இவர்கள் சில வருடங்களுக்கு முன்பிருந்தே திட்டமிட்டு ஒரு முறையைக் கையாண்டிருக்கிறார்கள். அவ்வாறு இவர்கள் வெளியிட்ட செய்திகளில், காங்கிரஸ் ஆட்சியின் ஜன விரோதப் போக்கை உறுதியாக எதிர்த்த தோழர்கள் மீது, வேண்டுமென்றே பொய்யான செய்திகளையும் கலந்து வெளியிட்டிருக்கின்றனர். இதனால் கட்சிக்குள்ளேயே குழப்பத்தையும் நம்பிக்கையின்மையையும் பரப்பி ஸ்தாபன கட்டுப்பாட்டையும் தகர்த்துக் கொண்டனர். இத்துடன் நில்லாது (பாக்ஷனல்) கோஷ்டி சேர்க்கும் வேலைகளையும் நாடு முழுவதும் மேற்கொண்டு, கட்சிக் கொள்கையை சீர்திருத்தப் பாதையில் திருப்புவதற்கு விடாது சதி செய்து அவதூறுகளைக் கிளப்பி, கட்சிக் கோட்பாடுகளை யெல்லாம் நிராகரித்துத் தன்இச்சைப் போக்கில் செயல்பட்டனர்.

ஏற்கெனவே பலவீனமாயிருந்த கட்சி ஸ்தாபனம், திருத்தல் வாதம் தலையெடுத்த பிறகு முற்றிலும் சீரழிந்து விட்டது. கூட்டங்களுக்கு சரியாக வராமலிருத்தல், வெகுஜன ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாயிருந்து அவற்றில் பணிபுரிவதைத் தட்டிக் கழித்தல், ஓயாது ஏதாவது அரசியல் பேசுவதோடின்றி எத்தகைய உருப்படியான கட்சி வேலையையும் நிறைவேற்றாமலிருத்தல், பத்திரிகை பிரசுரங்களைப் படிக்காமலும், பரப்பாமலும் இருத்தல், கொள்கையைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதிலும் அதற்காகப் போராடுவதிலும் அசிரத்தை, கட்சிக்கு நிதி கொடுக்காமல் காலங்கடத்துதல், கட்சி ஸ்தாபன கோட்பாடுகளுக்குப் புறம்பாக யாரிடமும் எங்கும் எதையும் பேசுதல், கட்சி முடிவுகளையும் தனது யூனிட் முடிவுகளையும் நிறைவேற்றாமல் இருத்தல்—இம்மாதிரி கட்சிக்குள் கடந்த சில வருடங்களாக நுழைந்துள்ள கட்சி விரோதப் போக்குகள் நம்மை செயலற்றவர்களாக்கி விட்டன. திருத்தல் வாதத்தின் ஸ்தாபன பிரதிபலிப்புக்களான இத்தகைய படுமோசமான அம்சங்களையும் இதர ஸ்தாபன பலவீனங்களையும் நாம் எதிர்த்துப் போராடி கட்சியின்

ஸ்தாபனக் கோட்பாடுகளை நிலைநாட்டியாக வேண்டும். திருத்தல்வாதக் கருத்துகளும் ஸ்தாபன அராஜகமும் இவ்வாறு உள்ளிருந்தே கட்சியை அரித்துத் தின்று நாசப்படுத்தி யிருக்கின்றன.

இந்த நிலையில் அவ்வப்போது நாம் ஸ்தாபனத் தீர்மானங்களைப் போட்டுக் கொண்டு கட்சிக் கட்டுப்பாடு பற்றிப் பேசியதெல்லாம் திருத்தல் வாதம் புரையோடி யிருந்த ஸ்தாபனத்தில் பயனற்று ஏட்டோடு நின்றன.

தொழிற்சங்க அரங்கத்தில்

19. தொழிற்சங்க இயக்கத்தில் திருத்தல் வாதம் வேரூன்றியிருப்பதை நன்கு காணலாம். இது தற்செயலான நிகழ்ச்சியல்ல. சுதந்திர இந்தியாவில் புதிதாக ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியிலும் விஸ்தரிப்பிலும்—தொழிலாளரில் ஒரு பகுதியினருக்குச் சில சலுகைகள் கிடைத்ததென ஏற்கெனவே குறிப்பிட்டோம். இந்த வளர்ச்சி சிருஷ்டித்த பிரமைகளோடு தொழிற் சச்சரவுகளுக்காக நிறைவேற்றப்பட்ட புதிய சட்டங்களும், தொழிற் கோர்ட்டுகளும் சட்ட பூர்வமாகவே பிரச்சினைகள் தீர்த்துக்கொள்ளப்பட முடியுமென்ற போக்கை நமது தொழிற் சங்க இயக்கத்தில் பலப்படுத்தின. கோர்ட்டுகளுக்குச் செல்வதும், அதிகாரிகளைப் பார்ப்பதும் முக்கியமாகி, தொழிலாளிகளின் பாத்திரம் குறைந்து, ஒன்றிரண்டு தலைவர்களே சகல விஷயங்களையும் நிர்வகிப்பவர்களாகவும், நிறைவேற்றுபவர்களாகவும், நிலைமை மாறியது. சந்தா அல்லது நன்கொடைகள் கொடுப்பதோடு தொழிலாளிகளின் பாத்திரம் நின்றது. சில தொழில்களில் கணிசமான வசூல்களும் கிடைத்தன. சங்கக் கட்டிடங்கள், கார் வசதிகள், நிறைய முழுநேர ஊழியர்கள், கூட்டுறவு சொசைட்டிகளின் நிர்வாகம் முதலிய புதிய அம்சங்கள் தோன்றின. அரசாங்கமும் தான் வகுத்த சட்டங்களில் எவ்வளவு தூரம் போராட்டங்களைத் தவிர்க்க முடியுமோ அல்லது அவற்றை ஒத்திப் போட

முடியுமோ அதற்கெல்லாம் போதிய தடைகளை விதித்துக் கொண்டது. இத்துடன் வர்க்க சமரசத்தை அடிப்படையாகக் கொண்டதொழிற்சங்கக் கல்வியும் பல தொழிலாளிகளுக்கு நாடுமுழுவதும்விசேஷப் பள்ளிகளில் சர்க்காரால் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் சீர்திருத்த வாதப் போக்கு, இந்த மண்ணில் நன்கு வேர் பிடித்தது. கம்யூனிஸ்டுகள் எவ்வாறு கட்சித் தலைமையில் தொழிற்சங்கங்களை நடத்தி கட்சியையும் வளர்க்க வேண்டுமென்பதற்கு பதிலாக, பிரிட்டிஷ் தொழிற் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களில் வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்தைக் கைவிட்டுப் பணியாற்றும் உத்தியோகஸ்தர்களைப் போல் நமது சங்க ஊழியர்களின் வேலை முறை, கண்ணோட்டம் முதலியன மாற்றம் அடைந்தன. நமது மாநிலத்தில் கோவை சென்னை போன்ற நகரங்களில் தொழிற் சங்க இயக்கம், ரிவிஷனிஸ்ட் கருத்துக்கள் வேர் பிடித்துப் பரவுவதற்கு முக்கியமாக விளங்கியிருப்பது தற்செயலல்ல.

இந்த இயக்கத்தின் அகில இந்தியத் தலைமையில் டாங்கே இருந்து வந்துள்ளது ரிவிஷனிசக் கருத்துக்கள் இந்த அரங்கத்தில் மற்ற இடங்களைவிட ஆழமாக வேரூன்ற உதவி செய்தது. இந்த அரங்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு இக்கருத்துக்களைப் பரப்புவதற்கும், கட்சி மையத்திலும் சரி, தொழிற்சங்க கேடர்களை உபயோகித்துப் பலமாநிலங்களிலும் சரி, கட்சித் தலைமையை நிராகரிப்பதற்கும் கட்சிக்குப்போட்டியாகவே ஒருதனி அரசியல் போக்கையும் தனி ஸ்தாபனத் தொடர்புகளையும் நீண்டகாலமாகவே சிருஷ்டித்துக்கொள்வதற்கும் தொழிற் சங்க அரங்கம் டாங்கே கோஷ்டியால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதைபற்றிப் போதிய எச்சரிக்கையுடன் இல்லாமலிருந்தது இதற்கு முன்பிருந்த கட்சித் தலைமையின் பெருந்தவறாகும். ஆனால் இனி இதை எதிர்த்து போராடும் போது, நமது மாநிலத் தொழிற்சங்க இயக்கத்தை சரியான கொள்கைக்கும் கட்சியின் கட்டுப்பாட்டுக்கும் கொண்டுவர நாம் எவ்வளவு பொறுமையுடனும் உறுதியாகவும்,

தொடர்ந்தும் போராடவேண்டி யிருக்குமென்பதை நாம் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும்.

எர்ணுகுளம் அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரசில் வகுக்கப்பட்ட "இருதூண் கொள்கை"—நாடு—வர்க்கம் இரண்டிற்கும் கவனம் காட்ட வேண்டுமென்றும், எல்லாப் பேச்சுவார்த்தை முறைகளையும் கிளர்ச்சி முறைகளையும் கையாண்ட பிறகுதான் ஸ்ட்ரைக் செய்யவேண்டுமென்றும் குறிப்பிட்டதானது—நடைமுறையில் பூர்ஷுவாவர்க்க முறை வளர்ச்சியே விமர்சனமின்றி நாட்டின், மக்களின் வளர்ச்சியாக வர்ணிக்கப்படுவதற்கும், ஸ்ட்ரைக் போராட்டங்களே தவிர்க்கப்படுவதற்குமான போக்குக்குமே பயன் படுத்தப்பட்டது.

திருத்தல் வாதம் தொழிற்சங்க இயக்கத்தில் வேரூன்றியதின் விளைவை—கட்சி ஸ்தாபனம் அந்த அரங்கத்தில் வளர்க்கப்படாததிலும், கட்சியின் தலைமைப் பாத்திரம் அங்கு நிராகரிக்கப்பட்டதிலும், கட்சி அரசியலோ கட்சி வசூலோ அங்கு எடுத்துச் செல்லப்படாததிலும், சில இடங்களில் கட்சியைவிட தொழிற்சங்கமே தலைமை ஸ்தாபனமாகக் காட்சியளிப்பதிலும் பார்க்கலாம். தொழிலாளி வர்க்கத்தின் ஜீவனே சிதைக்கப்பட்டுள்ள நிலையில் தொழிற்சங்க இயக்கம் இன்று முடங்கி நிற்கிறது. திருத்தல் வாதப் போக்கு தலைதூக்குவதன் விளைவாக, முதலாளித்துவ வளர்ச்சியை நாம் குறைகூறிப் பயனில்லையென்றும், நாட்டு நலனில் அக்கறையுடன் வேலைப் பளுவை ஏற்பதும் அவசியமென்றும் தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட விளைவையும் இங்கே குறிப்பிடலாம்.

விவசாய இயக்கத்தில்

20. விவசாய தொழிலாளி இயக்கத்தையும், ஸ்தாபனத்தைக் கட்டுவதையும் அறவே புறக்கணித்து வருவதிலும், விவசாயிகளுக்கு நிலம் வேண்டுமென்ற கோஷத்தை ஒலிப்பதற்கே கூசுவதிலும், காங்கிரஸ் சர்க்காரின் நிலச் சீர்திருத்தமே பெரிது, அதை அமுல்

படுத்துவதுதான் கட்சியின் விவசாய அரங்கக் கடமை என்ற பார்வையிலும், திருத்தல்வாதம் கட்சியின் விவசாய இயக்கத்தில் புகுந்திருப்பதைக் காணலாம். திட்ட நடவடிக்கைகள் எழுப்பிய பிரமைகள் நமது விவசாய அரங்க வேலைகளையும் பாதித்திருக்கின்றன. அடிப்படை வர்க்கங்களை அஸ்திவாரமாகக் கொண்டு பிற நேசப் பகுதிகளையும் வெல்லுவதற்கான வழி வகைகளைக் கண்டு விவசாயிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சொசைட்டிகள் முதலியவற்றில் சில தோழர்கள் பணியாற்றுவது மட்டும்தான் கவனம் பெற்றுள்ளது. விவசாய சங்கங்களும் இயக்கமும் ஸ்தம்பித்திருப்பதில் ஆச்சரியமில்லை. கட்சியின் தலைமையும் உறுதியாக அங்கு வளர்க்கப்பட்டு, அரசியல் போதம் ஏற்படுவதற்கும் வெகுஜன இயக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் உடனே கவனம் செலுத்தித்தான் கட்சியை மீட்பது சாத்தியம்.

21. சீர்திருத்தவாதப் போக்கு திருத்தல்வாதமாக உருவெடுத்து வரும் அறிகுறிகள் ஏற்பட்டு வந்தபோதும் அதை முக்கியமாக எடுத்து நமதுகட்சி விவாதிக்க வில்லை. 1957 மாஸ்கோ பிரகடனமும் 1960 மாஸ்கோ கூட்டறிக்கையும் உலக கம்யூனிச இயக்கத்தில் திருத்தல்வாதம்தான் பிரதான திரிபென்று எச்சரித்தும் நமது கவனம் அதில் எழவில்லை. கட்சியின் மேற்கு வங்க மாநில கவுன்சிலும் பஞ்சாப் மாநில கவுன்சிலும் தஸ்தாவேஜு பூர்வமாக நமது கட்சிக்குள் நுழைந்துள்ள திருத்தல்வாதத்தை விவாதிக்க கோரியபோதும் ஒன்றும் நடக்கவில்லை. 1958இல் சென்னையில் கூடிய தேசீய கவுன்சில் முடிவு இதை விவாதிக்க வேண்டுமென்று பணித்தும் இது நிறைவேற்றப்படவில்லை. திருத்தல் வாதம் இஷ்டப்பட்டவாறு கட்சியில் செயல்படுவதற்கு இந்தத் த்வறும் உதவி செய்தது.

22. விஜயவாடா கட்சிக் காங்கிரசில் திருத்தல் வாதம் தான் விரும்பிய வகையில் பூர்ணமாகக் கட்சிக் கொள்கையை மாற்ற முடியவில்லை. ஆயினும் விஜயவாடா அரசியல் தீர்மானம் ஏகோபித்து நிறைவேற்றப்

பட்ட பிறகும் அதில் நிராகரிக்கப்பட்ட சீர்திருத்தவாதப் போக்கையே கட்சியிலிருந்த திருத்தல் வாதிகள் நடைமுறைக்குக் கொண்டு வர விரும்பினர். பெங்களூரில் பிறகு கூடிய தேசீய கவுன்சில் கட்சியின் பொதுத்தேர்தல் கொள்கையை முடிவு செய்தபோது அவர்கள் எழுப்பிய ஆட்சேபணைகளை நிராகரித்து, காங்கிரஸ் கட்சிக்கு எதிரான ஒரு நிலையைஉறுதியாக எடுத்துத்தான் இந்தியா முழுவதும் பொதுவாகக் கட்சி போட்டியிடவேண்டுமென்று முடிவு செய்தது.

23. தோழர் அஜய் கோஷ் மறைவிற்குப் பிறகு டாங்கே தலைமையில் தேசீய கவுன்சில் உறுப்பினர்களாயிருந்த திருத்தல் வாதிகள், டாங்கேயைப் பொதுக் காரியதரிசியாக்க முற்பட்டார்கள். இது ஏற்கப்படாவிட்டால் கட்சியை இரண்டாக்குவதற்கும் துணிந்தார்கள். கட்சியின் ஒற்றுமையை முன்னிட்டுஇறுதியாக, எல்லா முக்கிய அரசியல் கருத்துக்களையும் பிரதிபலிக்கும் ஒரு கூட்டு செயற்குழுவும், அதில் டாங்கே தலைவராகவும், தோழர் ஈ. எம். எஸ். பொதுச் செயலாளராகவும் இருப்பதென்றும் தேசீய கவுன்சில் முடிவு செய்தது. இதை சாத்தியப்படுத்த கட்சிக்கு ஒரு தலைவர் பதவியும் சிருஷ்டிக்கப்பட்டு. அதற்கு அடுத்த கட்சிக் காங்கிரசில் அங்கீகாரம் பெறுவது என்றும் முடிவும் செய்யப்பட்டது. திருத்தல் வாதத்தின் ஆழமான அபாயத்தையும் சொரூபத்தையும் அன்று நமது தலைமைக் குழுவில் ' போதிய அளவுக்குப் பார்க்கவில்லை என்றுதான் கூறவேண்டும். அன்றைய நிலைமையில் பல நிபந்தனைகளுடன் நிறுவப்பட்ட இந்த ஏற்பாடு கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் என்று நம்பப்பட்டது. ஆனால் அதைத் தொடர்ந்து அந்தப் பதவியை உபயோகித்துக் கொண்டு கட்சியைப் பிளவு படுத்த டாங்கே எவ்வாறு செயல்பட்டாரென்பதை சரித்திரம் நிரூபித்து விட்டது. அவர் சேர்மனாக வந்த இரண்டே வருடங்களுக்குள் திருத்தல்வாதம் கட்சியின் அதிகார பூர்வமான கொள்கையாகி பல தவறான ஸ்தாபன நடவடிக்கைகள் எடுத்துக் கட்சியை இரண்டாக்கிவிட்டது.

திருத்தல்வாதம் சொரூபம் காட்கிறது.

24. இந்திய—சீன எல்லைப் பிரச்னையில் நெருக்கடி முற்றிப் போராக வெடித்ததும், திருத்தல் வாதம் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தனது முழு உருவத்துடன் வெளி வந்தது. பல தோழர்கள் சிறையிலடைக்கப் படுவதற்கு கூசாமல் திருத்தல் வாதிகள் சிலர் வேலை செய்தார்கள். திருத்தல் வாதத்தை எதிர்த்து வந்த பல தலைவர்கள் சிறையிலிருந்ததை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தங்களை எதிர்த்ததோழர்களையும் கமிட்டிகளையும் நிர்தாட்சணியமாக ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கினர்கள், நாட்டு பாதுகாப்பு என்ற கோஷத்தினடிப்படையில் பூர்ஷுவா வர்க்கத்திற்கு வால்பிடிப்பதைக் கட்சியின் முழு அரசியல் கொள்கையாக அரங்கேற்றிக் கொண்டார்கள்.

25. ஆனல் இவர்களுடைய தவருன போக்குகளுக்குக் கடுமையான ஆட்சேபணையும் எதிர்ப்பும் கட்சி அணிகளிடமிருந்து நாடெங்கும் எழுந்தது. 1962 நவம்பர் தேசீய கவுன்சில் தீர்மானம் தமிழ் மாநில விசேஷ மகாநாட்டில் விவாதிக்கப்பட்டபோது, "பூர்ஷுவா தேசீயக்" கண்ணேட்டத்திற்கு இரையாகிவிடாமல் சர்வதேசத் தொழிலாளி வர்க்க கண்ணேட்டத் தெளிவோடு பல தோழர்கள் அதை உறுதியாக விமர்சித்தனர். பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளில்—சரியான அரசியலுக்காகப் போராடுவதற்கும், திருத்தல்வாதத்தை உறுதியாக எதிர்ப்பதற்கும், மாநில மாநாட்டில் நடந்த மேற்கூறிய விவாதத்தின் அனுபவம். நிச்சயம் உதவியிருக்கிறதெனக் கூறலாம்.

தமிழ்நாட்டில் தோன்றிய சில அனுபவங்கள்

26. தமிழ் நாட்டிலும், திருத்தல்வாதப் போக்கும் அதையொட்டிய கட்சிக்குள் கட்சி கட்டும் வேலைகளும் தோன்றிய சமயத்திலேயே அதை சரியாக உணர்ந்து கட்டுப்படுத்தத் தவறியிருக்கிறோம்.

இங்குள்ள சில தலைவர்களுக்கும் டாங்கேக்கும் தனி யாகத் தொடர்புள்ள செய்தியை அன்று நாம் முக்கியப் படுத்திப்பார்க்கவில்லை. கோவையில் நடந்த அகில இந்

திய காங்கிரஸ் மகாநாட்டில் கட்சியின் தலைமைப் பாத் திரம், டாங்கேயாலும் அவரைப் பின்பற்றுபவர்களாலும் நிராகரிக்கப்பட்டும் அதைப் பற்றி மாகாண நிர்வாகக் குழு வுக்குள் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிக்கொள் வதோடு விட்டுவிட்டோம். இந்தப் போக்கு அன் றைக்கே கட்சி அணிகளுக்கு அறிவிக்கப்பட வில்லை.

27. கோவை மாவட்டத்தில் அன்று பஞ்சாலைத் தொழிற் சங்கத் தலைவர்களாயிருந்தவர்கள், கட்சிப் பொறுப்புகளை ஏற்க மறுத்து, கட்சியின் தலைமைப் பாத் திரத்தை நிராகரித்து, ஒரு போட்டிக் கட்சியாகச் செயல் பட்ட விவரங்கள் தெரிந்தும், இதை உறுதியாக அம்பலப் படுத்தி திருத்துவதற்கு பதிலாக லிபரலிசப்போக்கிலேயே இந்தக் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களு டன் நடந்துகொண்டோம். இவற்றையெல்லாம் ஒரு ஸ்தலப் பிரச்சினையாகவும், கட்சிக்கும் தொழிற்சங்கத்திற் கும் இடையே ஏற்பட்டுள்ள ஒரு முரண்பாடாகவும் மட்டும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தோம். திருத்தல்வாதத்தின் அஸ்திவாரமே அங்கு தகர்க்கப்படவேண்டியதை நாம் அன்று உணரவில்லை. இதனால் பிறகு, கோவை மாவட் டத்திலும் சரி, நமது மாநிலத்திலும் சரி கட்சி மிகவும் பாதிக்கப்பட்டது.

28. 'ஜன சக்தி'யின் மதுரைப் பதிப்பை வெளிக் கொண்டுவர கோவை மாநில மாநாடு ஏகோபித்துத் தீர் மானம் நிறைவேற்றியும் அந்தத் தீர்மானத்தை அவ மதித்து பயனற்றதாகச்செய்ய சிலதோழர்கள் பாடுபட்டார் கள். இன்று அவர்கள் திருத்தல்வாதிகளில் முக்கியஸ்தர் களாகக் காட்சியளிப்பது தற்செயலல்லஎன்று தெரிகிறது. எவ்வளவோ கஷ்டப்பட்டு எண்ணற்ற தோழர்கள், பொதுமக்கள் உதவியால் நிறுவப்பட்ட மதுரை அச்சக

ரோட்டரி யந்திரத்தை எப்படியாவது விற்றுவிடுவதற்கு திருத்தல்வாதிகள் இன்று துடிதுடிப்பதிலும் ஆச்சரிய மில்லை.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு திருத்தல்வாதத் தாக்குதல்

29. பொதுத் தேர்தலில் நாம் அனுசரிக்கவேண்டிய கொள்கையை தேசீய கவுன்சில் வரையறுத்துக்கொடுத் தது. இதை மாநில கவுன்சில் மெஜாரிட்டி ஏற்றுக் கொண்டது. ஆனால் இதை ஏற்காத சில தோழர்கள் இந்த முடிவுக்குக் கட்டுப்பட்டு நிற்காமல், தேர்தல் காலத் திலேயே காங்கிரஸ் ஸ்தாபனத்தை முற்போக்கானதாக வர்ணித்து, காங்கிரசை எதிர்த்து முறியடிக்கவேண்டிய குறிக்கோளை பலவீனப்படுத்தி தி.மு.கவைப் பிரதானமாக எதிர்க்கும் வழியில் கட்சி அணிகளைத் திசை திருப்பிவிட் டனர். கட்சிக்குள் குழப்பத்தைப் பரப்பி, தேசீய கவுன் சில் தீர்மானம் நிறைவேறவொட்டாமல் செய்தனர். கட்சி முடிவுகளை நிறைவேற்றாத தோழர்களைக் கண்டிப்பதற்கு பதிலாக அவரவர் போக்குக்கு விட்டுவிடுவது என்ற லிபர லிசப் போக்கை அன்று கடைப்பிடித்திருக்கிறோம். இதை யும் திருத்தவாதிகள் நன்கு பயன்படுத்திக்கொண்டார் கள்.

30. பொதுத் தேர்தலில் கட்சிக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டது. தி.மு.க அதிக ஸ்தானங்களைப் பெற்றது. அகில இந்திய ரீதியில் பூர்ஷுவா வர்க்கத்தையும் அத னுடைய காங்கிரஸ் கட்சியையும் பற்றி கட்சி என்ன நிலை எடுக்கவேண்டுமென்பதில் கட்சிக்குள் எவ்வாறு அபிப் பிராய பேதமேற்பட்டதோ அதேமாதிரி, மாநில மட்டத் தில் தி.மு.க பற்றி நாம் என்ன நிலை எடுப்பது என்பது நமது மாநிலத்தில் மிக முக்கியமான கட்சிப் பிரச்சினை யாகத் தொடர்ந்து இருந்துவந்திருக்கிறது. பொதுத் தேர்தலுக்குப் பிறகு நமக்கு ஏற்பட்டிருந்த சோர்வான நிலைமையில், தந்திரமாக தி.மு.க பிரச்சினையை பிளவு வேலைக்கு திருத்தல்வாதிகள் மேற்கொண்டனர். பிரி

வினையின் அபாயத்தை எதிர்க்கவேண்டுமென்று பரவலாகக் கட்சியிலிருந்த ஆர்வம் அவர்களுக்கு ஒரு அஸ்திவாரத்தையும் கொடுத்தது. தி.மு.கவின் நடைமுறை பல இடங்களில் நியாயமாகவே நமது தோழர்களின் ஆத்திரத்தையும் வெறுப்பையும் கிளப்பியிருந்தது. தி.மு க. விற்கு இவ்வளவு அதிக ஸ்தானங்களும் நமக்கு ஒன்றுமில்லா நிலையும் என்பது, மேலும் தி. மு. க எதிர்ப்பில் அணிகள் திரள உதவியது. கடந்தகாலக் கட்சித் தலைமை பிரிவினை வாதத்தை எதிர்க்கவில்லையென்றும், தி.மு.கவிற்கு வால்பிடிக்கும் கொள்கையை அனுசரித்தார்களென்றும் துணிந்து பகிரங்கமாகத் திருத்தல்வாதிகள் பொய் கூறினார்கள், அன்றைய தலைமையை அகற்றுவதற்கு கட்சி ஸ்தாபனக் கோட்பாடுகளைத் தூக்கியெறிந்து மாநில முழுவதும் செயல்பட்டார்கள். பூர்ஷுவா பத்திரிகைகளையும் உபயோகித்தார்கள். தலைமையை மாற்றவேண்டுமென்றார்கள். தி.மு.க பிரச்சினையை விவாதிக்க ஒரு விசேஷ மாநாட்டைக் கூட்டச் சொன்னார்கள்.

31. பொதுத் தேர்தல்களில் தேசியக் கவுன்சில் காட்டிய வழிப்படி செயல்பட்டதுதான் சரி என்று கும்பகோணத்தில் கூடிய மாநில கவுன்சில் மெஜாரிட்டியாக முடிவு செய்தபோதிலும், விசேஷ மாநாட்டைக் கூட்டி தி.மு.க பிரச்சினையை விவாதிக்க நாம் உடன்பட்டோம். கட்சியின் ஒருமைப்பாட்டிற்காக நாம் அவ்வாறு செய்வதே சிறந்ததெனக் கருதினோம். ஆனால் திருத்தல்வாதிகள் நம்முடைய ஒவ்வொரு தயக்கத்தையும் நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள். பகிரங்கமாக கட்சித்தலைமைக்கு எதிராகக் கட்சி கட்டினார்கள். மாநில மாநாட்டிலேயே அவர்கள் நிலைமையை பயன்படுத்திக்கொண்டு கட்சி ஸ்தாபன விரோத நடவடிக்கைகளின்மூலம் மெஜாரிட்டியை மாநிலக் கவுன்சிலிலும் நிர்வாகக் குழுவிலும் செயற்குழுவிலும் பெற்றுக்கொள்வதில் வெற்றி கண்டார்கள். இவ்வாறு தலைமை ஸ்தாபனத்தைக் கைப்பற்றிக் கொண்டு நமது மாநிலத்திலும் திருத்தல்வாதக் கொள்கையை பகிரங்கமாக நடைமுறைக்குக் கொண்டுவரவும், எதிர்த்தவர்களை உறுதியாக அடக்கவும், அவர்களுக்கு ஏற்

காத பல தோழர்களை முக்கிய பொறுப்புகளிலிருந்து அகற்றவும் தயக்கமின்றி நடவடிக்கை எடுத்தார்கள்.

விசேஷ மாநில மகாநாட்டுச் சீர்குலைவு

32. இவர்களது நடவடிக்கைகள் கட்சி விரோத் மானவை என்று பொதுத் தேர்தல் முடிந்த உடனேயே தெரிந்தும்,இதைப்பற்றி ஆட்சேபிப்பதோடே,எச்சரிக்கை செய்வதோடோ, விளக்கம் கேட்பதோடோ நின்று விட் டோம்.இவர்களை குற்றவாளிக்கூண்டில் அன்றே நிறுத்தி சியைச் சீர்குலைத்து வருவதற்காக நடவடிக்கை எடுக்க நமக்குத் தைரியமில்லை. கட்சி அணிகளுக்கு விவரங்களை அறிவித்து எச்சரிக்கவும் இல்லை. மாநில மாநாடு காலத் திலேயே நம்முடன் ஒத்துழைத்து, மாநாட்டிற்கு நம் முடன் சேர்ந்து தலைமை தாங்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு பாக்ஷனல் வேலைகளைத் தொடர்ந்து சிலர் செய்தனர். மாநாட்டு நடவடிக்கைகள் நமது தலை மையில் இல்லாமல் நழுவிப் போவதற்கும் அவர்கள் வேலை செய்தனர். இதனால் நமது பொறுப்பிலிருந்தே நாம் விலகிய மாதிரிதான் மாநாட்டின் இறுதி நாட்களில் நாம் காட்சியளித்தோம். அவர்களை அன்றே எதிர்த்துப் போராடியிருந்தால் அடக்குமுறை அபாயம் நெருங்கி யுள்ள ஒரு சூழ்நிலையில், கட்சி இரண்டாகப் பிளவு பட்டு விடுமே என்று தயங்கினோம்.

திருத்தல்வாதத்திற்கு எதிர்ப்பு

தமிழ் நாட்டில் பல தோழர்கள் சிறையிலடைக்கப் பட்ட பிறகு தங்களது அரசியலைத் திணிக்கவும் கட்சி ஸ்தா பனத்தைப் பிளவு படுத்தவும் திருத்தல்வாதிகள் மேற் கொண்ட நடவடிக்கைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே எதிர்ப் பும் கிளம்பியது. மதுரை மாவட்டக் கட்சித் தோழர்கள் இதில் முக்கிய பங்கு வகித்து திருத்தல்வாதத் தலைமையின் கோபத்திற்கும் உருட்டல் மிரட்டல்களுக்கும் ஆளானூர்

கள். மதுரையில் எப்படியாவது கட்சி ஸ்தாபனத்தைக் கலைத்துவிட திருத்தல்வாதத் தலைமையினர் பல முயற்சிகள் எடுத்துப் பார்த்தார்கள். 'கலை—இலக்கியமாநாடு' இந்தோ-சோவியத் மாநாடு என்றெல்லாம் நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக் குழப்பத்தைப் பரப்பப் பாடுபட்டார்கள். ஆனால் இவையனைத்தும் மதுரை கட்சி ஸ்தாபனத்தால் உறுதியாக முறியடிக்கப் பட்டன, மதுரையில் நடைபெற்ற மாநில கவுன்சில் கூட்டத்திலும் குற்றாலத்தில் நடந்த மாநில கவுன்சில் கூட்டத்திலும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கவுன்சில் உறுப்பினர்களும் மற்றும் சில தோழர்களும் மைனாரிட்டியாய் இருந்த போதிலும் உறுதியாகத் திருத்தல்வாதக் கொள்கைகளை எதிர்த்து சிரமம் மிகுந்த அந்தக் கட்டத்தில் போராடினார்கள். தங்கள் மாவட்ட நிலையைப் பாதுகாத்துக் கொண்டதோடு பிற இடங்களுக்கு தோழர் ராமராஜை உதவிக்கு அனுப்பவும் முடிந்தது. இதே மாதிரி கோவைத் தொழிலாளி வர்க்கமும் விழிப்புற்று திருத்தல்வாதத்தை எதிர்த்துப் போராட முன்வந்து "தீக்கதிர்" பத்திரிகை துவக்கப் படுவதற்கும் வேறு பல வகைகளிலும் உதவி புரிந்தார்கள். சென்னை நகரத்திலுள்ள பல ஹோட்டல் அரங்கத் தோழர்களுக்கும் மற்றும் பல தோழர்களுக்கும் திருத்தல்வாதிகளை எதிர்த்து உண்மையான கட்சி ஏற்படுவதற்காகப் பாடு பட்டதில் அன்றே குறிப்பிடத்தக்க பங்கு இருந்திருக்கிறது. சிறைப்படுத்தப்பட்ட தோழர்கள் வெளிவந்ததும் ஏற்கனவே இவ்வாறு உருவாகிக் கொண்டிருந்த திருத்தல்வாத எதிர்ப்புப் போராட்டத்தில் அவர்களும் பங்கு கொண்டு பலப்படுத்துவது சாத்தியமாயிற்று. அவசர நிலைப் பிரகடனமும், திருத்தல்வாதிகளின் அவதூறுகளும் ஒடுக்கு முறை நடவடிக்கைகளும் மேலோங்கியிருந்த சூழ்நிலையில் மனந் தளராது கட்சியைப் பாதுகாக்கப் போராடிய தோழர்களுக்கெல்லாம் நமது பாராட்டுதலை இந்த மாநாட்டில் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

34. திருத்தல்வாதிகள் 1962.—லிருந்து கட்சியைப் பிளவு படுத்த என்னென்ன நடவடிக்கைகளை மேற்

கொண்டு கட்சியை இறுதியில் இரண்டாக்கினர்கள் என்ற முழு விவரங்களும் 25-3-1964 இல் கும்பகோணத்தில் கூடிய தமிழ் மாநில கவுன்சிலுக்கு நமது 29 தோழர்கள் கவுன்சில் கூட்டத்திலிருந்து வெளியேறுமுன் சமர்ப்பித்த அறிக்கையிலும், 29—4—64 அன்று நமது மாநில இணைப்புக்குழு மதுரையிலிருந்து வெளியிட்ட அறிக்கையிலும் விபரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை இரண்டும் கட்சி வெளியீடாக நமது தோழர்களனைவருக்கும் எட்டியுள்ளன. எனவே அந்த விவரங்களை இங்கு திருப்பிக் கூறவேண்டியதில்லை. கட்சியில் திருத்தல் வாத அரசியலைத் திணிப்பதற்கும் கட்சி ஸ்தாபன விரோத நடவடிக்கைகளின் மூலம் கட்சியை இரண்டாக உடைப்பதற்கும் திருத்தல்வாதத் தலைமை தமிழ் நாட்டில் எவ்வாறு செயல்பட்டதென்பதற்குப் போதிய சான்றுகள் அந்த அறிக்கைகளில் உள்ளன. விவரங்களுக்கு அவற்றைப் பார்த்துக் கொள்ளவும்.

தமிழ் நாட்டில் திருத்தல்வாத அரசியல்

1963–ஏப்ரலில் குற்றாலத்தில் நடந்த மாநிலக் கவுன்சில் கூட்டத்தில் திருத்தல்வாதத் தலைமை சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் "பண்டித நேருவின் தலைமையில் உள்ள பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துவதே நமது குறிக்கோள்" என்று துணிந்து வரையறுத்துக் கூறினர். மேட்டுப்பாளையம் கூட்ட அறிக்கையில் "காங்கிரசில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது," "காங்கிரசிலுள்ள பிற்போக்கு சக்திகள் திரு. காமராஜ் அவர்களின் உஷார் தன்மையால் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன", 'கம்யூனிஸ்டு கட்சியை அவதூறு செய்வதென்பது காங்கிரஸை பொறுத்தமட்டில் அநேகமாக நின்று விட்டது," "ஜனநாயக உணர்வு காங்கிரசில் மேலோங்கி வருகிறது" என்ற விளக்கங்களின் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கினர்.

36. 1963 டிசம்பரில் திருவொற்றியூரில் நடந்த மாநில கவுன்சில் கூட்டத்தில் முனிசிபல் தேர்தலில் காங்கிரஸ்

கட்சியுடன் ஐக்கிய முன்னணி தேடிய தீர்மானத்தில் பின் வருமாறு கூறினர்:

" நகர மன்றங்களைக் கைப்பற்ற சவால் விடுத்துள்ள பிற்போக்குக் கூட்டணியைத் தவிர்த்து இதர ஜனநாயக கட்சிகளுடனும் நாம் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும்." (இதில் "ஜனநாயகக் கட்சி" என்று குறிப்பிடுவது பிர தானமாகக் காங்கிரசைத்தான் என்று அந்தக் கூட்டத்தி லேயே ஏற்றுக் கொண்டனர்.

சென்னை மேயர் தேர்தலில் தோழர் S கிருஷ்ணமூர்த் திக்கு எதிராக காங்கிரஸ் அபேட்சகரையே ஆதரித்தனர். 1962-க்குப் பிறகு தமிழகத்தில் நடந்த சட்டசபை உப தேர்தல்களிலெல்லாம் காங்கிரஸ் கட்சி அபேட்சகருக்கே கட்சியின் அதிகார பூர்வமான ஆதரவை அளித்து வேலை செய்தனர்.

முனிசிபல் தேர்தலில், திருச்சி, தூத்துக்குடி, சென்னை போன்ற இடங்களிலெல்லாம் காங்கிரஸ் கட்சியுடன் பகி ரங்கமாகக் கூட்டுச் சேர்ந்து காங்கிரஸ் கட்சி வெற்றி காண் பதற்கும் கம்யூனிஸ்ட் கட்சி பலவீனப்படுவதற்கும் தங்கள் கைங்கரியத்தைச் செய்தனர். இதனல் கட்சி அணிக ளிடமும் ஆதரவாளர்களிடமும் எழுந்த அதிருப்தியையும் எதிர்ப்பையும் இவர்கள் பொருட்படுத்தவில்லை. மத்தியக் கமிட்டி இது சம்பந்தமாக விதித்த ஒரு நிபந்தனையையும் முனிசிபல் தேர்தலில் இவர்கள் நிறைவேற்ற மறுத்தனர். வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு அப்பட்டமாக காங்கிரசிடம் சரணுகதியடைந்து காங்கிரஸ் கட்சிக்குக் கம்யூனிஸ்டு கட்சியை ஏவலாளாக்கிய அவல நிலைமை ஏற்படவில்லை. இதனுலேதான்—தமிழ் மாநிலத் தலைமை யின் திருத்தல்வாதத்தை சீக்கிரம் உணர்ந்து பல தோழர் கள் நிராகரிப்பதும் துரிதப்பட்டது. திருத்தல்வாதிகளும் நாமும் ஒரே கட்சியில் இருப்பது சாத்தியமில்லை என்பதை அவர்களது அரசியலும் கட்சி ஸ்தாபன விரோத நடவடிக் கைகளும் எல்லா தோழர்களுக்கும் நன்கு எடுத்துக்காட்டி விட்டது.

தி. மு. க. பற்றிய தேர்தல் கண்ணோட்டம்

37. தி. மு. க. பற்றிய கண்ணோட்டம், கட்சிக்குள் அபிப்பிராய பேதம் உள்ள ஒரு முக்கிய பிரச்னையாக இருந்ததை, இவர்கள் பயன் படுத்தி கட்சியைப் பிளவு படுத்த முடிந்தது. மாநிலத் தலைமை ஸ்தானத்திற்கு வந்த பிறகு தி. மு. க. எதிர்ப்பு என்ற தந்திரத்தை உபயோகிக்க அவசியமில்லை என்று கருதி, காங்கிரஸ் ஆதரவுக் கொள்கையை பகிரங்கமாக முன்னுக்கு வைத்தார்கள். எனினும் நம்மை விடாது தி. மு. க. ஆதரவாளர்கள் என்று பொய் கூறி, தி. மு. க. வின் கொள்கையின் மீது நியாயமாகவே வெறுப்புற்றிருக்கிற நமது தோழர்களைக் குழப்ப, அதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டே வருகின்றனர். இதில் நாம் எடுத்துள்ள நிலையையும் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

1958—59 லிருந்தே இதை ஒரு அகில இந்தியப் பிரச்னையாகவும் பார்த்து வழி காட்டும்படி தேசிய கவுன்சிலை நாம் கேட்டிருந்தோம். இது குறித்து நமது அபிப்பிராயங்களையும் அனுப்பினோம். காரைக்குடி மாநில மாநாட்டில் இது தீர்க்கமாக விவாதிக்கவும்பட்டது. ஆனால் தேசிய கவுன்சில் இது குறித்து முடிவே எடுக்கவில்லை. 1962–ல் விசேஷ மாநாடு தி. மு. க. பிரச்னையை விவாதிக்கப் போவதால் அதன் முடிவுகளை தேசிய கவுன்சிலுக்கு அனுப்பிய பிறகு முடிவெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கென விசேஷ மாநில மாநாட்டு விவாதத்திற்காக ஒரு தஸ்தாவேஜையும் அன்றிருந்த மாநில கட்சித் தலைமை தயாரித்து, கட்சி முழுவதும் அதை விவாதிக்க ஏற்பாடு செய்தது. ஆனால் விசேஷ மாநாடு அந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளவே இல்லை! ஸ்தாபன அறிக்கையையும் விவாதிக்காமல் புதிய தலைமையை மாநாடு தேர்ந்தெடுத்த சூழ்நிலை நமக்குத் தெரியும்.

முனிசிபல் தேர்தல்கள் நமது மாநிலத்தில் வந்த போது, தி. மு. க. சம்பந்தமாக நமது கொள்கை என்ன என்ற பிரச்சினை மீண்டும் வந்தது. திருவொற்றியூரில்

நடைபெற்ற மாநில கவுன்சில் கூட்டத்தில் நமது நிலையை தெளிவு படுத்தினேம். தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்காக தி. மு. க. வை ஆதரிப்பதோ, தி. மு. க. வை எதிர்ப்பதற்காக காங்கிரசை ஆதரிப்பதோ கூடாது என்றும், நமது சொந்த பலத்தில் நின்று இரு கட்சிகளையும் எதிர்த்து வெற்றிகாண முயற்சிக்க வேண்டுமென்ற நிலையைத்தான் கட்சி அனுசரிக்க வேண்டுமென்றும் நமது மாற்றுத் தீர்மானத்தில் எடுத்துக் காட்டினேம். பின்பு கும்பகோணத்திலும் மதுரையிலும் வெளியிட்ட நம் அறிக்கைகளிலும் இதே நிலையை வற்புறுத்திக் காட்டியிருக்கிறேம். தி. மு. க. சம்பந்தமாக இதுதான் இன்றைக்கு பொறுத்தமான தேர்தல் கொள்கையாயிருக்கும். தி. மு க. பற்றிய அடிப்படை விஷயங்களை நாம் உரிய காலத்தில் விவாதித்து முடிவு செய்து கொள்ளலாம். வெகுஜன இயக்கங்களை பொறுத்தமட்டில், தி. மு. க, ஆயினும் சரி மற்ற எந்தக் கட்சியாயினும் சரி, ஜனநாயக கோஷங்களுக்காக ஜனநாயக திசை வழியில் செயல்படும் யாருடனும் சேர்ந்து நின்று மக்களின் ஐக்கியத்தை வளர்க்க நாம் பாடுபடுவோம்.

38. திருத்தல்வாதிகள் நம்மீது இடைவிடாது பொழியும் இன்னெரு அவதூறு நாம் சீன ஆதரவாளர்களென்பதாகும். இவ்வாறு "பூர்ஷுவா" தேசீயத்தைக் கையாண்டு மக்களை நமக்கு எதிராகத் திருப்பும் பூர்ஷுவா முறையையும், நம்மை சிறையில் அடைக்கும்படி சர்க்காரைக் கோரும் முறையையும் அவர்கள் தொடர்ந்து கையாண்டு வருகிருர்கள். கும்பகோணத்தில் நடந்த மாநிலக் கவுன்சில் கூட்டத்தில் சீனக் கட்சித் தொடர்புடனும் கட்டளையுடனும் நாம் செயல் படுவதாக அவதூறு செய்தார்கள். இதை நாம் வன்மையாக எதிர்த்துக் கண்டித்தோம். வெளியிலிருந்து நமக்குத் தொடர்பு வருவதாகக் குறிப்பிட்டு விட்டு அதை நாம் மறுத்தவுடன் ஆதாரமில்லை என்பதைஏற்றுக் கொண்டார்கள். இவர்கள் பூர்ஷுவா ஏஜண்டுகளாக இவ்வாறு நம்மை எதிர்த்துச் செயல்படுவதை மக்களிடம் அம்பலப்படுத்தியாக வேண்டும்.

திருத்தல் வாதத்தை எதிர்த்த போராட்டம் பலப்படுகிறது

39. சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் சிறையிலிருந்து எஞ்சிய தமிழ்நாட்டுத் தோழர்களும் வெளிவந்தபோது திருத்தல்வாதிகள் தங்களை எதிர்த்தவர்கள் மீது புதிய தாக்குதல்களை ஆரம்பித்திருந்தனர். ஜூன் மாதத்திலேயே மணலி கந்தசாமி, என். கே. கிருஷ்ணன், பார்வதி கிருஷ்ணன் ஆகிய தோழர்கள் கையெழுத்திட்ட ஒரு ரிப்போர்ட்டு தேசிய கவுன்சிலுக்கு அனுப்பப் பட்டிருந்தது. அதில் தமிழ் நாட்டில் ஒரு போட்டி மையம் கட்சிக்கு எதிராகச்செயல் பட்டு கட்சியை பிளவு படுத்துவதாகப் புளுகப் பட்டிருந்தது. இதே புளுகுப் பிரசாரத்தைத் தமிழ் நாட்டுத்தோழர்கள் மத்தியிலும் அவிழ்த்து விட்டு, ஸ்தாபனக்கட்டுப்பாடு மிக்க பல தோழர்களைக் குழப்பப் படுத்தி வைத்தனர் தோழர் ஏ. கே. கோபாலன் மீது போட்டி மைய வேலைகளை விசாரிப்பது என ஒரு கமிஷன் விசாரணை நாடகமும் நடந்தது. இதே குற்றச்சாட்டு தோழர் ராமராஜ் மீது கட்சி அணிகளிடம் பரப்பப்பட்டது. தோழர் அப்பு 'தீக்கதிர்' பத்திரிகை வெளியிட முன் வந்ததற்காக அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை அறிவிக்கப்பட்டது. அந்த கட்டத்தில் தோழர்கள் ஏ.கே.ஜி, ராமராஜ், அப்பு போன்றவர்கள் இந்தத் தாக்குதலையெல்லாம் தாங்கிக்கொண்டு உண்மை நிலவரத்தைக் கட்சி அணிகளுக்குத் தெரிவிக்கும் பணியை நிதானத்தை இழக்காமலும் தொடர்ந்தும் செய்தனர். ஏ. கே. ஜி யை கூட்டங்களுக்கு அழைக்கக் கூடாதென்ற சுற்றறிக்கையானது திருத்தல்வாதிகள்மீது அதிருப்தி வளர்வதற்கே உதவியது. சிறையிலிருந்து வெளிவந்த தோழர்கள் மாநில மட்டத்திலும் அகில இந்திய மட்டத்திலும் கட்சியின் ஒற்றுமைக்காகவும் சரியான கொள்கைக்காகவும் போராடிய அதே சமயத்தில் தமிழ் நாட்டில் கட்சி அணிகள் மத்தியில் பிரச்சாரம் மாநில ரீதியாக நன்கு பரவும் வகையில் பங்கு கொண்டனர். தோழர் பி. ஆர். அவர்களுக்கு இதில் முக்கிய பாத்திரம் இருந்தது.

திருத்தல் வாதிகளும் பி. ஆர் ஐ பிரதான இலக்காக வைத்து இடைவிடாது தாக்கிப் பொழிந்த அவதூறு களுக்கு எல்லேயேயில்லே. ஆனுல் திருத்தல்வாதத் தலேமைதான் இதனுல் மேலும் தனிமைப் படுத்தப் பட்டது. நாம் பொறுமையையும் நிதானத்தையும் இழக் காமல் அரசியல் ரீதியாக பதில் கூறியதும் உண்மைகளே எடுத்துரைத்ததும், கொள்கையை விளக்கியதும் கட்சி அணிகளிடமும் மக்களிடமும் வரவேற்பைப் பெற்றன. 'தீக்கதிர்' பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஏற்பாடுகள் துவங் கின. திருத்தல்வாதிகள் விதித்த அர்த்தமற்ற தடைகளே நிராகரித்து கட்சி அணிகளுக்குத் தெளிவேற்படுத்தும் வேலே எண்ணற்ற ஜெனரல்பாடி கூட்டங்கள் மூலமும் பொதுக் கூட்டங்கள் மூலமும் விரிவாக நடைபெற்றது. கட்சி வேலேகளுக்கவசியப்பட்ட நிதி வசூலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வேலேகளேயும், அப்போது கட்சி ஸ்தாபனத்துக்குள்ளேயே நடைபெற வேண்டியிருந்த பல வேலேகளேயும் மாநில ரீதியான இணேப்புடன் தலேமை தாங்கி நடத்துவதற்கு 7 பேர் கொண்ட ஒரு மாநிலக் குழுவும் தற்காலிகமாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

40. 1963 இறுதியில் இந்தக் குழுவின் முயற்சி யினுல் பல மாவட்டங்களிலிருந்து அழைக்கப்பட்ட பிரதி நிதிகள் 25 பேர் சென்னேயில் மூன்று நாட்கள் கூடினூர் கள். அரசியல் நிலேமையை விவாதித்து, திருத்தல் வாதத்தை எதிர்த்து நடைபெறவேண்டிய கட்சி வேலே களுக்கு விரிவாக மாநில அடிப்படையில் திட்டமிட்டனர். இதனுல் மாவட்ட வேலேகள் மேலும் அபிவிருத்தியடைந் தன. தீக்கதிர் விற்பனேயும் அதிகரித்தது. பிரசுரங்கள் வெளியிடவும் திட்டம் தீட்டப்பட்டது. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குழுவின் தலேமையும் இக் கூட்டத் தில் ஏற்றுக்கொள்ளப் பட்டு அதுவரை நடந்து வந்த வேலேகளும் அங்கீகரிக்கப்பட்டன.

41. 1964 மார்ச்சு மாதத்தில் நமது 29 தோழர்கள் மாநில கவுன்சிலிலிருந்து வெளியேறியது ஒரு முக்கிய மான திரும்பு முனேயாயிற்று. ஒற்றுமைக்காக நாம் முன்

வைத்த ஆலோசனைகளைத் திருத்தல்வாதிகள் நிராகரித்ததும், இந்த 29 தோழர்களும் கொடுத்த ஸ்தாபன அறிக்கை பிறகு ஒரு கட்சிப் பிரசுரமாக வெளியிடப்பட்டு கட்சி அணிகள் மேலும் திருத்தல்வாதத்தை எதிர்த்து திரள்வதற்கு உதவி செய்தது.

தமிழ் மாநில இணைப்புக்குழு தேர்வு

42 1964 ஏப்ரலில்32 தேசீயகவுன்சில் அங்கத்தினர்கள் தேசீய கவுன்சிலிலிருந்து வெளியேறி விடுத்த அறிக்கை நமது வேலைகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது. பெருவாரியான கட்சித்தோழர்கள் இதை ஆதரிக்கிறார்களென்ற நிலையும் தென்படலாயிற்று. இந்த அடிப்படையில் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருந்த கடமைகளை நிறைவேற்ற ஏப்ரல் 28, 29 தேதிகளில், தமிழ் மாநில கட்சிப்பிரதிநிதிகள் கூட்டம் மதுரையில் நடந்து. அதில் தமிழ் மாநில இணைப்புக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்தக் குழு முடிவு செய்த முக்கியமான அரசியல் தீர்மானம் திருத்தல் வாதத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டம் மேலும் வலுப்படுவதற்கு நன்கு உதவியது. மதுரைக் கூட்டத்தில் திருச்சி மாவட்டத் தோழர்கள் பங்கெடுக்க முடியவில்லை. ராமநாதபுரம் மாவட்டத்தில் நமது பிரச்சாரத்தையும் அரசியலையும் எடுத்துச் செல்ல அப்போதுதான் சாத்தியப்பட்டது. ஆனால் மேலும் ஒரு மாதம் கடந்து செல்வதற்குள் எல்லா மாவட்டங்களிலும் நமது மாநில இணைப்புக்குழுவின் தலைமையை ஏற்று இயங்கிய மாவட்ட தலைமை ஸ்தாபனங்கள் உண்டாயின. மதுரை, கன்யாகுமரி, தென்னாற்காடு, வடாற்காடு, செங்கற்பட்டு போன்ற ஜில்லாக்களில் ஏற்கனவே இருந்த மாவட்ட ஸ்தாபன அமைப்பில் நாம் மெஜாரிட்டியாக இருந்ததால் அவையே நமது புதிய மாவட்டக் கமிட்டிகளாக மாறின. இதர மாவட்டங்களில் நமது திட்டப்படி திருத்தல்வாதிகளை எதிர்க்க முற்பட்ட தோழர்களுக்குத் தலைமை தாங்கி வழிகாட்டும் பொறுப்பை நிறைவேற்ற மாற்று மாவட்டக் கமிட்டிகள் நிறுவப்பட்டன. இவற்றைத் தடுக்க அவ

தூறுக் கணைகளோடு ஒழுங்கு நடவடிக்கைகளை திருத்தல் வாதிகள் எங்கும் கையாண்டு பார்த்தனர். ஆனால் எதுவும் நமது வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை.

43. ஜூன் மாதத்தில் தெனாலி அகில இந்திய கன்வென்ஷனுக்கு நமது மாநிலத்திலிருந்து 20 பிரதி நிதிகள் சென்றிருந்தனர். தெனாலி முடிவுகள் நமது மாநிலத்திலும் நிறைவேற்றப்பட்டன. ஜூலை 16-ம் நாள் தெனாலி தீர்மான அறைகூவலுக்கிணங்க விலைவாசிக் குறைப்பு ஆர்ப்பாட்டங்கள் பல இடங்களில் நடந்தன. கட்சியின் அரசியல் பிரச்சாரம் மேலும் விரிவுபட்டது கட்சி உறுப்பினர் பதிவு மேற்கொள்ளப்பட்டது. உணவு விலை வாசிக் குறைப்புக் கிளர்ச்சி மேற்கொண்டு நடத்தப் பட்டது. பல மாவட்டங்களில் தொழிற்சங்க வேலைகளும் அத்துடன் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர் இயக்கமும் கவனிக்கப்பட்டன. இந்த வேலைகள் பலவற் றில்—திருத்தல்வாதிகளோடு மோதுதல்கள் ஏற்பட்டன. அவற்றைச் சமாளித்துக் கொண்டு வெகுஜன ஸ்தாபன வேலைகளை நடத்தி வந்திருக்கிறோம். 'தீக்கதிர்' விற்பனை யும் அதிகரித்தது. பிரசுரங்களையும் மேலும் கொண்டுவர முடிந்தது. கடந்த 2 மாதங்களுக்குள் கிளை அல்லது ஸ்தல மாநாடுகளை முடித்து, மாவட்ட மாநாடுகளையும் முடித்துக் கொண்டு, அந்த மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளாகிய நாம் மாநில மாநாட்டிற்கு இப் போது வந்திருக்கிறோம்.

44. ஒரு சில மாதங்களுக்குள் குறிப்பிடத்தக்க சாதனையுடன் நாம் இங்கு கூடுவதில் மகிழ்ச்சியடைவது இயற்கையே. பல சிரமங்களுக்கும், திருத்தல்வாதிகளின் எதிர்ப்புக்குமிடையே ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் நமக்குச் சில சிறந்த அனுபவங்களைக் கொடுத்துள்ள தோடு எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியடைவோமென்ற நம்பிக்கையையும் சரியான பாதையில் செயல்பட்டு வரு கிறோமென்ற உணர்வையும் நமக்கு ஊட்டி யிருக் கிறது.

ஒரு முக்கியமான கடமை

45. இத்துடன் நாம் திருப்தியடைந்துவிட முடியாது. நமக்கு முன்பு மிக முக்கியமான பல உடனடிக் கடமைகள் நிற்கின்றன. முதலாவதாக, நாம் தமிழ் நாட்டில் மெஜாரிட்டி தோழர்களைத் திரட்டுவதில் வெற்றிகண்டுள்ளபோதிலும், கணிசமான அளவுக்குப் பல தோழர்கள் இன்னும் திருத்தல் வாதிகளின் பிடிப்பில் சிக்கி நிற்பதை நாம் கவலையுடன் கவனித்தாக வேண்டும். அவர்களில் நேர்மையான பல தோழர்கள் நீண்ட காலமாய் நம்முடன் பணியாற்றிய சிறந்த தோழர்கள். நாளா வட்டத்தில் நம்முடன் அணி சேர்ந்து பலம் பொருந்திய கட்சியைக் கட்டுவதற்கு பணிபுரியக் கூடியவர்கள். வலதுசாரிப் போக்கில் இன்றும் உள்ள எல்லோரையும் நாம் ஒரே மாதிரிப் பார்க்கக்கூடாது அவர்களைக் கீழ்கண்டவாறு பிரித்துப் பார்க்க முடியும்:—

(1) அரசியல் ரீதியாக நம் கருத்துக்கள் பொதுவாக சரி என்று ஒத்துக் கொண்டாலும், கட்சிக் கட்டுப்பாடு என்ற பிடிப்பில் இருப்பவர்கள். (2) குறிப்பிட்ட சில பிரச்சினைகளில் வலதுசாரித் தலைவர்களின் உதவியை எதிர் பார்த்து நிற்பவர்கள் (3) தனிநபர் உறவை முறித்து, உறுதியான அரசியல் முடிவுக்கு வரத் தயங்குகிறவர்கள். (4) நம் அணியில் இருக்கும் சிலர் மீது தனிப்பட்ட குரோதம் காரணமாக உள்ளவர்கள் (5) அடக்கு முறைக்கு ஆளாகிவிட நேரிடும் என்று அஞ்சுபவர்கள். (6) சுய நலத்திற்காக அங்கேயே இருப்பது நலம் என்று கருதுகிறவர்கள் (7) அரசியல் ரீதியாகத் திருத்தல்வாதக் கருத்துக்களை உறுதியாக ஏற்றுக் கொண்டுள்ளவர்கள்.

மேற்கூறியவற்றில் முதல் நான்கு காரணங்களுக்காக விலகி நிற்கும் வலதுசாரித் தோழர்களை திரும்பத் திரும்ப அணுகி சரியான பாதைக்குக் கொண்டுவர நாம் தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும்.

"தீக்கதிர்"

46. திருத்தல்வாதிகளை எதிர்த்து நாம் இன்றைய நிலையை வந்தடைந்ததில், 'தீக்கதிர்' பத்திரிகை மிக முக்கியமான பாத்திரம் வகித்து நமது அரசியலையும் ஸ்தாபனத்தையும் வளர்த்துக் கொள்ள உதவியிருக்கிறது. பல தோழர்கள் சிறையிலிருந்த காலத்தில் எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையிலும் திருத்தல் வாதிகளின் கடுமையான எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலும் பத்திரிகை வெளிவருவதற்கு முன் கை எடுத்துச் செயலாற்றிய தோழர்களையும் அதை சாத்தியப் படுத்திய எண்ணற்ற ஆதரவாளர்களையும் நாம் பாராட்ட வேண்டும். அந்தக் கட்டத்தில் தோழர் ஏ.கே.ஜி. அவர்கள் வழிகாட்டிய உதவிக்கு நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். 1963-ம் வருட இறுதியில்தான் அது சம்பந்தமாக அதிகாரப் பூர்வமான பொறுப்புக்களை நாம் ஏற்க முடிந்தது. 1964 ஏப்ரல் மாதத்திலிருந்துதான் தோழர் சங்கரய்யா ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். படிப்படியாகப் பத்திரிகையின் தரத்தையும் உள்ளடக்கத்தையும் கட்சிக் கொள்கையின் பிரசாரகனாகவும் கட்சியின் ஆர்கனைசராகவும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுமார் 6000பிரதிகள் இப்போது விற்கப்படுகின்றன ஆரம்பக் கட்டத்திலிருந்தே இதை விற்பதின் முக்கியத்துவம் மாவட்டத் தோழர்களாலும் உணரப்பட்டதால் தான் இந்த அளவுக்காவது பத்திரிகையைத் தொடர்ந்து வெளிக் கொண்டு வந்து அபிவிருத்தி செய்ய முடிந்தது. ஆயினும் பத்திரிகையின் உள்ளடக்கத்தை மேலும் அபிவிருத்தி செய்வதவசியம். அதோடு இப்போது விற்கப்படும் பிரதிகளையே இரட்டிக்க மாநில முழுவதும் கடுமையான முயற்சி உடனே எடுக்க வேண்டும்.

47. சில கட்சிப் பிரசுரங்களையும் கடந்த சில மாதங்களில் நாம் வெளியிட்டிருக்கிறோம். நமது வளர்ச்சிக்கு அவையும் துணை புரிந்திருக்கின்றன. வெளியீடுகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. குறைந்த விலையென்றால்

10,000 பிரதிகளுக்கு இப்போதே மார்க்கெட் இருக்கிறது. கொள்கைப் பிரச்சாரத்திற்கும் அரசியல் பயிற்சிக்குமான வெளியீடுகளை நாம் இன்னும் அதிகமான அளவுக்கு வெளிக் கொண்டுவருவது முற்றிலும் சாத்தியம். ஆனால் இதிலும் ஒவ்வொரு கட்சிக் கிளையும் பத்திரிகை விற்பனை யைப்போல் பிரசுர விற்பனையையும் ஒரு முக்கிய கட்சி வேலையாக மேற்கொண்டு தொகையை உடனுக்குடன் அனுப்பி வைத்தால்தான் நமது பிரசுர இலாகா அபிவி ருத்தி யடைந்து கட்சியை மேலும் வளர்த்து வலுப்படுத்த முடியும்.

பொருளாதாரத்தை வளப்படுத்துக

48. கட்சியின் பொருளாதார நிலை நமது அதிகரிக் கும் தேவைகளுக்கேற்பப் போதுமானது அல்ல. பண மில்லாததால் பல முக்கியமான வேலைகள் தடைப்படுகின் றன. பல முடிவுகளை நிறைவேற்றவும் முடிவதில்லை. ஆயினும்-இந்தக் கால கட்டத்தில் நாமும் ஒரு தனிக் கட்சி ஸ்தாபனமாக மாநில முழுவதும் செயல்பட்டிருக் கிறோ மென்பதைக் கவனித்தால், எண்ணற்ற பிரசாரக் கூட்டங்கள், கட்சிக் காரியாலயங்களின் செலவுகள், முழு நேர ஊழியர்களுக்கான சம்பளம் முதலியவற்றிற்காக நாம் தொடர்ந்தும் விடாது தொழிலாளிகள் விவசாயி களிடமும் பொது மக்களிடமும் பணம் வசூலித்துக்கொண் டேதான் பல கடமைகளை நிறைவேற்றி இருக்கிறோம் ஆயினும் கடன் இல்லாத கட்சிக் கமிட்டி இல்லை. மாநில மட்டத்தில் ஏற்படும் செலவுகளினால் கடன் பளு அங்கு மிக அதிகமாகவும் ஏற்படும் அபாயம் நீடிக்கிறது. மதுரை மாவட்டத்தில் தோழர் ஈ. எம். எஸ். விஜயத்தையொட்டி ரூ 10,000-க்கு மேல் வசூல் செய்ய முடிந்தது. இந்த மாநில மாநாட்டிற்கான வசூல்கள் வேறு நடந்துள்ளன. மக்களிடம் பணியாற்றிக் கொண்டே இடைவிடாது வசூ லுக்கும் அணுகினால் நமக்குத் தேவையான நிதி உத வியை மக்கள் அளிக்கத் தவறுவதில்லை என்பதே நமது அனுபவம். இனி நமது கட்சியின் துரிதமான வளர்ச்சியை

உறுதிப் படுத்த நிதிவசூலுக்கும், கணக்குகள்-ரசீதுகள் கறாராக இருப்பதற்கும் மாநிலக் கமிட்டியும், மாவட்டக் கமிட்டிகளும் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டும். காரியாலயச் செலவுகள், பிரயாணச் செலவுகள், பிரசாரச் செலவுகள் இவற்றிற்காகப் பணமில்லையென்றோ தேவை யான முழுநேரஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கமுடியாத தால் அவர்கள் நொடித்துப்போய் வேலையும் ஸ்தம்பித்தது என்றோ இனி இருக்கக்கூடாது. சரியான நிர்வாகம் ஒவ்வொரு மட்டத்திலும் கட்சியின் மிகக் கேந்திரமான ஒரு வேலையாகும். மாமூல் மாதாந்திர வசூல்கள் போக, வெகு சீக்கிரத்தில் நாம் மாநில ரீதியாக ஒரு விஷேசக் கட்சி நிதி வசூலுக்கு இறங்கியாக வேண்டும். அகில இந் திய மையத்திற்கும் இது சம்பந்தமாக நாம் செலுத்த வேண்டிய கடமையை நிறைவேற்றிக் கட்சி மையமும் நன்கு செயல் படுவதற்கு உதவ வேண்டும்.

தொழிற்சங்க வேலைகள்

49. தொழிற்சங்க அரங்க வேலைகள் ஏற்கனவே நமது தலைமையில் பல மாவட்டங்களில் நடந்து வருகின் றன. கட்சியின் சில சங்கங்களில் திருத்தல் வாதிகள் மட் டும் தலைமையிலிருக்கின்றனர். சில வற்றில் நாமும் அவர் களும் இருக்கிறோம். அவற்றில் நாம் அவர்களோடு இணைந்து நின்று தொழிற்சங்க ஒற்றுமையைப் பாது காத்து செயல்பட விரும்பினாலும், அரசியல் பலப் பரீட்சை நடத்திக் காட்டவும், தொழிற் சங்கங்களில் பிளவு படுத்தவுமே திருத்தல் வாதிகள் வேலை செய்கின்ற னர். பொதுவாக நமது தலைமையையே தொழிலாளிகள் விரும்புவதால், அவர்களை நீக்கிவிட்டு நமது தலைமையை மட்டும் தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்க விரும்புகிறார்கள். நாம் தொழிற்சங்க ஒற்றுமைக்காக நிற்கும் அதே சமயத் தில் திருத்தல் வாதிகளின் வர்க்க சமரச சீர்திருத்தப் பாதையை தொழிற்சங்கங்களில் அவர்கள் தொழிலாளி கள் மீது திணிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. முதலாளி வர்க்கத்தோடு கைகோர்த்து நின்று தொழி

லாளி வர்க்க நலன்களுக்கு விரோதமாக அவர்கள் செயல் படுவதை சும்மா பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது. இந்த நிலைமையில் இதே காலகட்டத்தில் பல தொழிற்சங் கங்களில் அவர்களுக்கும் நமக்கும் மோதல்கள் ஏற்பட்டுத் தொழிலாளர்களே தீர்ப்புக்கூறும் நிலை ஏற்பட்டது.

50. இதில் மிக முக்கியமான அனுபவம் கோவை பஞ்சாலை அரங்கத்தில் கிடைத்துள்ளதாகும். இது வரை சங்கத் தலைவர்களாயிருந்த திருத்தல் வாதிகளை எதிர்த்துப் பல மாதங்களாகவே தொழிலாளிகள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்துள்ளனர். சங்கத்தலை வர்கள், கட்சிக்குள் கையாண்ட அதே யதேச்சாதிகார ஆணவப் போக்கை தொழிலாளிகள் மீதும், கையாள ஆரம்பித்தனர். தங்கள் போக்கை ஆட்சேபித்த சங்கக் கிளைகளைக் கலைத்தனர். சங்கத்தின் வருடாந்திர மகா சபைக் கூட்டம் நடத்தி தலைமைத் தேர்வு நடத்துவதை ஒத்திப்போட்டனர். தொழிலாளிகள் சங்க உறுப்பினர்க ளாவதற்குத் தடைகள் எழுப்பினர், நாளாவட்டத்தில் பெருவாரியான தொழிலாளிகள் நமது தலைமையையே விரும்பினரென்பது தெளிவாயிற்று. இதை முன்னிட்டு சங்கத் தலைமையை புதிதாகத் தேர்ந்தெடுப்பதற்கான பூர் வாங்க நடவடிக்கைகளையும் கிளைச்சங்க மகாசபைகளை யும் மாவட்டப் பிரதிநிதிகளின் மகாசபையையும் நாமே முன்னின்று சங்க சட்டதிட்டப்படி நடத்தி முடித்து புதிய சங்கத் தலைமை கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாய் விட் டது, ஆயினும் பழைய திருத்தல் வாதத் தலைமை, பதவியை யும் காரியாலயத்தையும் சங்க சொத்துக்களையும் விட்டு அகல மறுக்கிறது. விவகாரம் கோர்ட்டுக்குச் சென்றுள் ளது. கோவை மாவட்டத்திலுள்ள இதர தொழிற்சங்கங் கள் அனேகமாக எல்லாம் நமது தலைமையில் ஏற்கெனவே உள்ளன.

51. சேலம் மாவட்டத்திலும் பெருவாரியான தொழிற் சங்கங்களில் நமது தலைமைதான் உறுதிப்பட்டு வருகிறது. ஆயினும் இங்கும் மாக்னிசைட் தொழிற் சங்கத்தில்

திருத்தல் வாதிகளோடு கடுமையான போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அவர்களும் ஒரு போட்டி சங்கமாக செயல்படுகிறார்கள். கோர்ட்டிலும் நமது தலைமையின்தேர்வு செல்லாதென்று வழக்குப்போட்டிருக்கிறார்கள். அண்மையில் 6 நாட்கள் நடந்த ஒரு மாக்னிசைட் கம்பெனி ஸ்டிரைக்கில் திருத்தல்வாதிகள் ஸ்ட்ரைக்கை உடைக்க பகிரங்கமாக கருங்காலி வேலை செய்தார்கள். அவர்களது நடைமுறையும் அரசியலுமே தொழிலாளிகளிடமிருந்து அவர்களை ஒதுக்கி வருகிறது. சேலம் ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கம் அவர்கள் தலைமையிலேயே இருந்து வந்தது. இப்போது அதன் ரிஜிஸ்ட்ரேஷன் கான்சல் ஆயுள்ளது. சேலம் பேப்பர் மில்ஸ், மேட்டூர் மின்சார ஒர்க்ஷாப் சங்கம் முதலிய வேறுபல சங்கங்களும் நமது தலைமைக்கு வந்துள்ளன. பீடி, முனிசிபல் தொழிலாளர்கள் மற்றும்பல சங்கங்களில் நமது தோழர்கள்தான் இருக்கிறார்கள்.

52. திருச்சி மாவட்டத்திலும், நாம் தொழிற்சங்க ஒற்றுமைக்காக இருந்தபோதிலும் இதை அரசியல் பலப் பரீட்சை பார்க்க விரும்பிய திருத்தல் வாதிகளுக்கு காவேரி நகர், கரூர் போன்ற இடங்களில் புதிய தலைமை தேர்வுகளில் நமது தோழர்களையே தேர்ந்தெடுத்துத் தொழிலாளிகள் திருத்தல் வாதிகளுக்குப் பாடம் கற்பித்திருக்கின்றனர். இதன் எதிரொலியாக அநேகமாக எல்லாத் தொழிற் சங்க பணியிலும் நமது தலைமையே உறுதிப்படும்.

53. சென்னை நகரத்தில், சர்க்கார் பஸ் போக்குவரத்து தொழிலாளர்கள் சங்கம், கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கம், பி. அண்டு, சி. பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் இவற்றிலும், ஆவடி 'ஸ்ட்ரக்சுரல்ஸ்' தொழிலாளர் சங்கத்திலும் திருத்தல் வாதிகள், தலைமையிலிருந்து அகற்றப்பட்டு, நமது தலைமை ஏற்கப்பட்டிருக்கிறது, ஏற்கனவே ஹோட்டல் தொழிலாளர் சங்கம் போன்ற இதர பல சங்கங்களிலும் நாம் இருக்கின்றோம், ஆயினும் திருத்தல் வாதிகள் பல சங்கங்களில் இன்னும் கணிசமாக

இருக்கின்றனர். அவர்களோடு போராடவேண்டிய நிர்ப்பந்தமும் சென்னை நகரில் அவர்களது நடவடிக்கைகளால் நாளுக்கு நாள் சிருஷ்டிக்கப்பட்டு வருகிறது. அண்மையில் சர்க்கார் போக்கு வரத்து தொழிலாளர் சங்கத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்தமும் அங்கு தொழிலாளர்கள் மீது தொடரப்பட்டுள்ள அடக்கு முறையும், வழக்குகளும், மற்றும் பல பிரச்சினைகளும் பொறுப்புமிக்க பல உடனடி வேலைகளை தொழிற்சங்க அரங்கத்தில் நமது சென்னை மாவட்ட கமிட்டிக்கு ஏற்படுத்தியிருக்கிறது. மாநில முழுவதும் இதில் வெற்றி காண்பதற்கு உதவி புரிய முன்வரவேண்டும்.

54. வடாற்காடு மாவட்டத்தில் பஞ்சாலை அரங்கத்தில் திருத்தல் வாதிகளும் நாமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். அவர்கள் இடம் பெறவேண்டிய அவசியம் அங்கு இல்லை. நாம் இதில் திட்டமிட்டு தொழிலாளர்களைத் திரட்டியிருந்தால் எதிர்ப்பே இருந்திராது. ஆயினும் இந்தத் தேர்வின் பிரதிபலிப்பாக நமக்குப் பிரதிகூலமாக நிலைமை சென்றுவிட்டதாகக் கருத வேண்டியதில்லை. மீண்டும் நமது தொடர்ந்த தொழிற்சங்க வேலைகள் நமது தலைமையைத்தான் உறுதிப்படுத்தும் வடாற்காடு பீடித் தொழிலாளர் சங்கம் இந்தக்கால கட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு எல்லா ஊர்களிலும் பீடித் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தி ஊதிய உயர்வையும் வென்றதோடு. மாகாண ரீதியான பீடித் தொழிலாளர் அமைப்பு துவக்கப்படுவதற்கு உதவியும் செய்திருக்கிறது.

55, நாகப்பட்டிணம் ஸ்டீல்ரோலிங்மில் தொழிலாளர் நடத்திய 18 நாள் வேலை நிறுத்தம் குறிப்பிடத்தக்கதாகும். ஒன்றுபட்ட உறுதியான போராட்டம் அது. திருத்தல் வாதிகள் தலையிட முயற்சித்தும் தொழிலாளர்களால் ஒதுக்கப்பட்டனர். சர்க்காரின் நிர்ப்பந்தங்கள் தொழிலாளரின் உறுதியைக் குலைக்க முடியவில்லை. இடைக்கால நிவாரணமாக ரூ 7 பெற்றனர். அங்கு மீண்டும் வேலைப் பளுவை எதிர்த்து ஒரு திடீர் வேலை நிறுத்தமும் கத

வடைப்பும் நடந்து இறுதியில் சமரசமாக முடிக்கப்பட்டது. பிரச்சினைகள் தொடர்ந்து உள்ளன.

மதுரை, நெல்லை, தென்னாற்காடு மாவட்டங்களில் மாமூலாக நடைபெற வேண்டிய பல சங்க வேலைகள் தொடர்ந்து கவனிக்கப்பட்டுள்ளன.

56. கீழ்க்கண்ட விஷயங்களில் தொழிற்சங்க அரங்கத்தில் உடனடியாக கவனம் செலுத்தப்படாவிடில் நாம் சரியாகத் தலைமைதாங்க முடியாது போய் தொழிலாளிகளிடம் அதிருப்தி வளரும்.

(1) மாநில ரீதியாக நமது தொழிற்சங்க இயக்க இணைப்புக்கும் வழிகாட்டுதலுக்கும் ஸ்தாபன ஏற்பாடு வேண்டும்.

(2) தொழிற்சங்கப் பொறுப்புகளை ஏற்க நிறைய ஊழியர்கள் வேண்டும்.

(3) தொழில் கோர்ட்டுக்கு உதவி தேவை.

(4) சங்கக் கணக்குகள் சரியாக வைக்கப்பட வேண்டும்.

(5) தொழிற் சங்கம் ஜனநாயக ரீதியாக நடத்தப்பட வேண்டும்.

(6) கட்சியின் தலைமைப் பாத்திரம், கட்சியின் வளர்ச்சி உத்தரவாதப்படுத்தப்படவேண்டும்.

விவசாய அரங்கம்

57. விவசாய அரங்கத்தில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தொடர்ந்து விவசாயத் தொழிலாளர் கூலி உயர்வுக்கான இயக்கமும் தாலுகா மாநாடுகளும் விவசாயிகளைத் திரட்டியுள்ளன. ஓரளவு கூலி உயர்வும் கிடைத்திருக்கிறது. சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் மற்ற மாவட்டங்களில் விவ

சாய இயக்கம் ஸ்தம்பிப்பிலேயே இருக்கிறது. மாநிலத் தலைமை ஏற்பாடுகளும் இல்லை. இதற்கு முக்கிய கவனம் தேவை. விவசாயத் தொழிலாளர்களை திரட்டுவதில் முன் போல் தட்டிக் கழிக்கும் போக்கை இனி அனுமதிக்கவே கூடாது.

பஞ்சாயத்து தேர்தல்கள் நெருங்கிவிட்டன. விவசாய அரங்கம் உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய அவசியத்தை இதுவும் சுட்டிக்காட்டுகிறது.

ஸ்தாபன வேலைகள்

58. கட்சி ஸ்தாபனத்தைப் பொறுத்தமட்டில் முதலில் கட்சி அணிகளை நமது அரசியல் அடிப்படையில் திரட்டி கட்சி ஸ்தாபனக் கட்டுக் கோப்புக்குள் கொண்டு வரும் வேலைகள் விரிவாக நடைபெற வேண்டியிருந்தன. இதற்கு முன் தயாரிப்பாக நிறைய ஜெனரல் பாடி கூட்டங்கள் நடந்துள்ளன. பிறகு அங்கத்தினர் பதிவுஇயக்கங்களை அல்லது ஸ்தாபன மாநாடு, மாவட்ட மாநாடுகள், இவற்றிற்கான அறிக்கைகள், பண வசூல்கள், இதர ஏற்பாடுகள் இவ்வாறெல்லாம் மாவட்டக் கமிட்டிகள் தொடர்ந்து மூச்சுவிடாமல் வேலை செய்திருக்கின்றன. மாநிலக் காரியாலயத் தோழர்கள் முடிந்த வரை இந்த வேலைகளில் மாவட்டங்களுக்குச் சென்று உதவியிருக்கின்றனர் இதனால் கிட்டத்தட்ட ஒரு நல்ல ஒருமைப் பாட்டுடன் மாநில மாநாட்டிற்கு நாமனைவரும் வர முடிந்திருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்த சுமார் 20000 கட்சி அங்கத்தினர்களில் 60 சதவிகிதம் ஏற்கெனவே நம்மை உறுதியாக ஆதரிக்கிறார்கள். மேலும் 10 சதவிகிதமாவது சீக்கிரம் நமது அணிக்கு வரும் நிலை உள்ளது. இதற்குரிய முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும்.

59. நமதுஸ்தாபன பலவீனங்களை எதிர்த்துப்போராடி அகற்றிக் கொள்ளாமல் நாம் முன்னேறுவது கஷ்டம். நமது கட்சி யூனிட்டுகளிலேயே அராஜகப் போக்கு,

தன்னிச்சைப் போக்கு, அபிப் பிராய பேதங்களை யூனிட்டுக்குள்ளேயே விவாதிக்காமலிருப்பது, பொருளாதார நெருக்கடி, முழு நேர ஊழியர்களுக்கு பராமரிப்பு இல்லாத நிலை, கட்சி முழுவதும் செயல் படாது ஒரு சிலரே வேலை செய்வது, வேலைகளைப் பரிசீலிக்காத போக்கு இவையெல்லாம் உள்ளன. கட்சிக்குள் நுழைந்த தொள தொளப்பான நிலைமையும் நீடிக்கிறது.

60. இவற்றையெல்லாம் நாம் உறுதியாக அகற்றிக் கொண்டு பலமான கட்சி ஸ்தாபனத்தைக் கட்டியாக வேண்டும். கடந்த காலத்தைப்போல் இது ஏட்டளவில் இருக்குமென்று கருதக்கூடாது. எப்போது திருத்தல் வாதத்தை உதறித் தள்ள முடிவு செய்து செயலில் இறங்கினோமோ அதன் ஒரு முக்கிய அம்சமாக கட்சி ஸ்தாபனக் கோட்பாடுகளை உறுதியாகக் கடைப்பிடிக்கும் பழக்கத்தையும் நாம் நிச்சயம் அனுசரிப்போம். நமது அபிப் பிராய பேதங்கள், சிரமங்கள் இவற்றையும் கட்சிக்குள் விவாதித்து, கூட்டு முறையில் தீர்வு கண்டு, ஒருமைப் பாடு காண்பது இன்று முற்றிலும் சாத்தியம். போகப் போக நமது வேலைகள் விரிவு படுவதையொட்டி, நமது இயக்கங்களும் போராட்டங்களும் பலரை ஆகர்ஷிப்பதையொட்டி, நமது கிளர்ச்சியும் பிரச்சாரமும் வலுப்பெறுவதை யொட்டி மேலும் பலர் கட்சிக்கு உறுப்பினர்களாக வருவார்களென்பதையும் ஞாபகத்தில் வைத்து செயல்பட வேண்டும்.

திருத்தல்வாதத்தின் சொரூபம்

61. தமிழ்நாட்டில் சென்ற (விசேஷ) மாநில மகா நாட்டிற்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்தாபனத்தில் ஆதிக்கம் வகிக்கும் தலைமை, அகில இந்திய ரீதியில் செயல்படும் திருத்தல்வாத டாங்கே கோஷ்டியின் ஒரு பகுதியே ஆகும்.

கட்சியை இரண்டாக்கியதற்குப் பொறுப்பு இந்த கோஷ்டியே ஆகும். கட்சியின் சகல கோட்பாடுகளையும்

மீறி, காங்கிரசுக்கு வால்பிடிக்கும் ஸ்தாபனமாக கட்சியை மாற்றியதன் மூலம் இந்த கோஷ்டி கட்சியை அரசியல் ரீதியில் பிளவு படுத்திவிட்டது. கட்சியின் சகல ஸ்தாபன அமைப்புக் கோட்பாடுகளிலிருந்தும் விலகிச் சென்று, கோஷ்டி நலனுக்காகக் கட்சியை பலியிட்டு, ஸ்தாபன ரீதி யிலும் இந்த கோஷ்டி கட்சியைப் பிளவு படுத்திவிட்டது.

தமிழகத் திருத்தல்வாதத் தலைமை முதலாளித்துவ வர்க்க அரசியலையும், வேலை முறைகளையும், கண்ணோட் டத்தையும், ஸ்தாபனச் சீர்குலைவுப் போக்குகளையும் கம்யூ னிஸ்ட் இயக்கத்தில் நுழைத்துள்ளது. பல உண்மை யான தோழர்களையும் அடியோடு நாசப்படுத்தி விட்டது. தொழிலாளி வர்க்கக் கட்சியின் சுயேச்சையான பாத்தி ரத்தை அறவே அழித்து விட்டது.

கட்சி அணிகளில் திருத்தல்வாதக் கொள்கைகளுக்கும் நடைமுறைக்கும் இயற்கையாகவே எழுந்துள்ள எதிர்ப் பைக் கண்டு, ஆத்திரமடைந்து, இந்தத் திருத்தல்வாதத் தலைமை நிதானத்தை முற்றிலும் இழந்து பல முக்கிய தோழர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள எந்த இழி செயலுக்கும் இன்று தயாராகி உள்ளது.

பூர்ஷுவா வர்க்கத்தின் சகல உதவிகளையும் பெற்றுக் கொண்டு, அரசாங்க அதிகாரிகளையும் துணை கொண்டு, நமது தோழர்கள் பலரை சிறையிலடைக்க வேண்டுகோள் விடுத்துக் கொண்டு, இன்று தொழிலாளி வர்க்கத்திற்கும் அதன் கட்சிக்கும் ஒரு பகைமையாக இத்திருத்தல்வாத தலைமை உருவெடுத்துள்ளது. அரசாங்க யந்திரத்தின் உறுப்புகளும், இவர்களுக்கு ஆதரவாக நேரிடையாகவும் மறை முகமாகவும் செயல்படுகின்றன.

இந்த கோஷ்டிக்கு பணவசதி நிறைய இருக்கிறது. இதை உபயோகித்துக் கட்சியின் ஒழுக்க நெறியை இவர் கள் முற்றிலும் சீர்குலைத்து விட்டார்கள்.

பிரிட்டிஷ் உளவாளி என்ற பயங்கரமான குற்றச் சாட்டுக்கு டாங்கே ஆளாய்விட்ட பிறகும் கூட, அதைப் பற்றி எள்ளளவும் கவலைப் படாமல், டாங்கேயின் தலைமையை இன்னும் உறுதியாகப் பின்பற்றி வரும் தமிழ் நாட்டுத் திருத்தல்வாதத் தலைமையினர், தங்களுடைய கோஷ்டி நலனுக்காக ஒரு கம்யூனிஸ்ட் கட்சியையே பலியிடத் தயங்கவில்லை என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

திருத்தல்வாத அரசியலின் விளைவாக நமது மாநிலத்தில் தொழிற்சங்க இயக்கம் பெருமளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறது; விவசாய இயக்கம் அறவே புறக்கணிக்கப் பட்டிருக்கிறது.

திருத்தல்வாதத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டம் மிகக் கடினமானதாக இருக்கும். நீண்ட காலம் உறுதியாகப் போராடி, அணிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் மேலும் இது குறித்து நல்ல தெளிவேற்படுத்தி அவர்களும் இதில் பங்குகொண்டுதான் திருத்தல்வாதத்தை நாம் முறியடிக்க முடியும்.

இந்தப் போராட்டம் தனி நபர்களை எதிர்த்து நடைபெறும் போராட்டமல்ல, தொழிலாளி வர்க்கத்தையே கவ்விக்கொண்டு அதன் ஜீவனையே அழிக்க முயற்சிக்கும் திருத்தல்வாதத்திற்கும், மார்க்சிஸ்டு — லெனிஸ்டு கொள்கைகளுக்கும் இடையே நடக்கும் மாபெரும் அரசியல் போராட்டமாகும் நமது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு, மக்களுக்கு இன்றியமையாத தொழிலாளி வர்க்கத் தலைமைப் பாத்திரத்தின் தூய்மையையும் உறுதியையும் பாதுகாக்கவல்ல, மகத்தான போராட்டமாகும். ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி இந்த நாட்டில் தனது சரித்திர பூர்வமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு, இப் போராட்டத்தில் வெற்றி காண்பது அவசியம்,

சில உடனடி கட்சிக் கடமைகள்

62. இந்த மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் புதிய மாநிலக் கட்சித் தலைமை இந்த மாநாட்டு முடிவுகளை நிறை

வேற்றும் வழியில் விவரங்களுக்குள்சென்று செயல்படு மென்று நம்பலாம். ஆனால் நமக்கு முன் நிற்கும் சில முக்கியமானகடமைகளை மட்டும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

1. கட்சியில் அடிப்படை மார்சிசக் கல்வி போதிப்பதற்கும் கட்சி கொள்கை, ஸ்தாபனம் பற்றிய தெளிவு ஏற்படுவதற்கும் அரசியல் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. கட்சியின் பிரச்சாரத்திற்கு இன்னும் நல்ல முறையில் திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும். இவற்றில் பொதுக் கூட்டங்கள் மட்டுமின்றி. 'தீக்கதிர்' 'கட்சி வெளியீடுகள்' உரித்தான பங்கை நிறைவேற்ற வேண்டும்.

3. பிரதான வெகுஜன அரங்கங்களான தொழிற் சங்க அரங்கத்திற்கும் விவசாய அரங்கத்திற்கும் உடனே மாநில ரீதியாக கவனம் செலுத்தி வளர்த்தாக வேண்டும். இதர வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் சீக்கிரம் கவனம் செலுத்த நாம் பாடுபடவேண்டும்.

4. கட்சியின் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளை முழுமையாகவும் சரியாகவும் கிரகித்து நடைமுறையில் அமுல் படுத்திக் கட்சியை பலப்படுத்த வேண்டும்.

5. வெகுஜன ஸ்தாபனங்களிலும் மக்கள் மத்தியில் நடைபெறும் இதர எல்லா கட்சி நடவடிக்கைகளிலும் கட்சியின் தலைமைப் பாத்திரம் உறுதியாக்கப் படுவதற்கு கவனம் செலுத்த வேண்டும்.

6. மக்கள் பிரச்னைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி அதற்கான இயக்கங்களை கட்சியின் முக்கிய வேலையாகக் கவனித்து அவற்றில் ஜனநாயக கோஷங்களினடிப்படையில் எல்லா மக்களும் அணி திரள்வதற்கு நாம் விடாது முயற்சி நடத்த வேண்டும்.

7. கட்சி நிதி வசூல்—கட்சியின் பொருளாதாரம் எப்போதும் நமது பிரதான கவனத்தில் இருந்து முக்கிய மாக கவனிக்கப்பட வேண்டும்.

8. முழுநேர ஊழியர்கள் நிலையை மாநில முழுவதும் பரிசீலித்து அவர்கள் சரியாக செயல்படுவதற்கான உத்தரவாதமும் நடவடிக்கைகளும் கவனமும் உடனே தேவை.

9. தீக்கதிர் விற்பனை இரண்டு மடங்கு அதிகரிக்க வேண்டும். கிளைகள் இதற்கும் கட்சி வெளியீடுகள் விற்பனைக்கும் கோட்டா எடுத்து திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும்.

10. திருத்தல் வாதத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டம், நாம் தனி ஸ்தாபனமாக வந்து விட்டதால் முடிந்து விட்டதாகக் கருதக்கூடாது. திருத்தல்வாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுமென்பதை எதிர் பார்க்க வேண்டும். அத்துடன் நமது பார்வையிலும், நடைமுறையிலும் கூட அத்தகைய கருத்துக்கள் ஏற்படாமலிருக்க எச்சரிக்கையாயிருப்பது அவசியம்.

11. திருத்தல் வாதம்தான் பிரதான அபாயம். ஆயினும் ஒரு திரிபை எதிர்க்கும் போது வேறொரு திரிபுக்கு நாம் தூபம் போட்டு விடக்கூடாது. எனவே, இடதுசாரி அதி தீவிரப் போக்குகள், வரட்டுத் தத்துவ வாதம் முதலியனவும் நமது இயக்கங்களையோ, வெகுஜன ஸ்தாபனங்களையோ, கட்சியையோ பாதிக்காமல் அவ்வப்போது உஷாராய்ப் பார்த்துக் கொண்டு சரியான பாதையில் செல்லுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

12. திருத்தல் வாதத் தலைமையின் பிடிப்பிலோ, வலதுசாரிப் போக்கிலோ இன்னும் இருந்து கொண்டோ ஊசலாடிக்கொண்டோ இருக்கும் நேர்மையான தோழர்களை நமது அணிக்குக் கொண்டுவருவதற்கு தொடர்ந்து முயற்சி நடக்க வேண்டும்.

மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியைக்கட்ட முன்னேறுவோம்

63. இந்த அளவுக்கு நாம் திருத்தல் வாதத்தை எதிர்த்துத் தனி ஸ்தாபன அமைப்புடன் முன்னேறியுள்ளதில் எண்ணற்ற தோழர்களின் உறுதியும் சலியாத உழைப்பும் அடங்கியுள்ளது. இனி நாம் தொடர்ந்து

ஒரு சிறந்த கம்யூனிஸ்ட் கட்சியாக செயல்பட்டு வளர்ந்தாக வேண்டும். இனித்தான் நமக்குப் பல கடுமையான வேலைகளும் கடமைகளும் உள்ளன. ஆனல் இதுவரை ஏற்பட்ட வளர்ச்சியே நாம் மேலும் முன்னேறுவதற்கும் உத்தரவாதமாகும். சிக்கலான எந்த நிலைமையும் கடினமான எந்தக் கடமையும் நமக்கு ஒருக்காலும் அயர்வை ஏற்படுத்தாது. மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் கோட்பாடுகளை உறுதியாகக் கடைப்பிடித்துச் செயல் பட்டு வளரும் கட்சியை, எந்த சூழ்ச்சியும் வெல்ல முடியாது. எந்த அடக்குமுறையும் அசைத்துவிட முடியாது. தொழிலாளிகள், விவசாயிகள், பொதுமக்கள், ஆகியோரின் பல பெரும் போராட்டங்களை நடத்தி, அரும் பெரும் தியாகங்களின் அடிப்படையில் வளர்ந்தது நமது கட்சி இதை முதலாளி வர்க்கத்தின் தொங்கு சதையாக ஆக்கத் திருத்தல்வாதம் ஆயிரம் சூழ்ச்சிகள் செய்தாலும், கட்சியை வளர்த்த உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும் நமது போராட்டங்களில் பங்கு கொண்டு சிறப்பித்து வந்துள்ள தொழிலாளிகளும் விவசாயிகளும், ஒருக்காலும் அனுமதிக்கமாட்டார்கள். நமது அணிகளுக்கு வந்து சேர்வதற்கு இன்னும் தயங்கிக் கொண்டிருக்கும் பழைய தோழர்கள் பலர் நம்மோடு வந்து நின்று செயலாற்றப் போகிற நாள் வெகுதூரத்தில் இல்லை. உண்மையான கட்சி ஸ்தாபனத்திற்கும் சரியான கட்சிக் கொள்கைக்கும் உறுதியாக வாருங்களென்று இந்த மாநாட்டு மேடையிலிருந்து அவர்களை அழைக்கிறோம், நமது திட்டப்படி நாம் தொடர்ந்து வேலை செய்வோம். நமது வேலைகள் தான் அந்த தோழர்களுக்கும் மேலும் நம்பிக்கையூட்டி அவர்கள் நம்மோடு வந்து பங்கு கொள்வதை துரிதப் படுத்தவல்லது. நமது எதிர்கால நடவடிக்கைகளின் விளைவாக இன்னும் ஆயிரக் கணக்கான புதிய உறுப்பினர்களையும் நமது கட்சி தமிழ்நாட்டில் ஆகர்ஷிக்கப் போவதும் நிச்சயம். கம்யூனிஸ்ட் கட்சியின் பரம்பரைக்கேற்ப ஒரு பலம் பொருந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்த நெருக்கடிக்கும் சோதனைக்கும் பின் நமது நாட்டில் மலரப் போவது திண்ணம். அந்த கடமை பூர்த்தி செய்யப் படுவதில் நமது பங்கை உறுதியாக நிறைவேற்றுவோமென்று சபதமேற்று இந்த மாநாட்டிலிருந்து செல்லுவோமாக!

சென்னை, 2—10—64